www.tamilarangam.net

தமிழீழ மக்கள் கட்சியின் அரசியல் ஏடு

# தமிழீழம்

மக்களுக்கே அனைத்து அதிகாரங்களும்

தை 2000

இதழ் – 10

.....இத்தனை படிப்பினைகளுக்குப் பிறகும் சந்திரிகா தன்னுடைய இனவாத நிலைப்பாட்டைக் கைவிடவில்லை. மாறாக அவரது செயலில் இனவெறி கூடிக்கொண்டு தான் வருகிறது.....

# சந்திரிகாவின் சிங்கள இனவெறியை அரசியலாலும் முறியடிப்போம்!

சந்திரிகா மறுபடியும் சிறிலங்கா அரசுத்தலைவராகிவிட்டார். அவர் தோற்று தமிழர் மனம்மகிழும் நிகழ்வு நடைபெறாமலே போயிற்று. இவரது தலைமையின் கீழ் மேற்கொள்ளப்பட்ட கொடுமைகளால் கொதிப்புற்றிருந்த தமிழ் மக்களுக்கு இது பெருத்த ஏமாற்றம்தான். தேர்தலில் ஒரு பாடம் படிப்பிக்க வேண்டும் என வெஞ்சினம் கொண்டு காத்திருந்தவர்களுக்கு சந்திரிகா வெற்றி பெற்றதும், அவரது வீம்புப் பேச்சுக்களை கேட்பதும் சகிக்க முடியாத விடயங்களாக அமைகின்றன.

தேர்தலுக்கு சில வாரங்களுக்கு முன்னர் வன்னிப்பெருநிலபரப்பில், விடுதலை புலிகள் அடைந்த பெருவெற்றிகளால் பெருமிதம் அடைந்திருந்த நமது மக்களில் பெரும்பாலானவர்களுக்கு, சந்திரிகா மீதான கடைசி நேர தற்கொலை தாக்குதல் தோல்வியுற்றது பெருத்த விசனத்தை ஏற்படுத்தியது. கூடவே, சிங்கள கிராமப்புற அனுதாப வாக்குகள், ஏற்கனவே அவரை ஆதரிப்பதென கங்கணம் கட்டிக் கொண்டிருந்த சிங்கள இனவாத வாக்குகளும், அரசயந்திரத்தை பயன்படுத்தி பெற்ற கணிசமான மோசடி வாக்குகளும் சேர்ந்து சந்திரிகாவின் வெற்றியை உறுதிப்படுத்தியது இந்த விசனத்தை மேலும் அதிகரிக்க செய்தது.

அமைப்பாக்கப்படாத, பரந்தளவில் நேரடி அரசியல் பங்குபற்றலுக்கான வாய்ப்பளிக்கப்படாத, எமது மக்களின் பொதுவான மனப்போக்கு தற்காலிகமாக மேலுள்ளவாறு அமைந்திருந்ததை புரிந்து கொள்வோம். எதிரிகளின் அடக்கு முறைக்கு உள்ளான மக்கள் தொடர்ந்து பார்வையாளர்களாக வைக்கப்பட்டிருக்கும் நிலையில், எதிரிகளின் ஒரு தரப்பினால் தமக்கு மோசமான கொடுமைகள் இழைக்கப்படும் போது, அதற்கு பழி தீர்க்கும் தீவிரத்துடன் எதிரிகளின் மற்றுமொரு தரப்பை ஆதரித்து முதன்மை எதிரியை வீழ்த்துவது தவிர்க்கமுடியாததே. அவர்களுக்கு அரசியல் ரீதியான மாற்று வழி தரப்படவில்லை என்பது இங்கு அடிப்படையாகும். ரணிலுக்கு அளிக்கப்பட்ட கணிசமான தமிழ் வாக்குகளை நாம் இப்படித்தான் புரிந்து கொள்ள வேண்டும். ஏதோவொரு விதத்தில் அடக்குமுறைக்கு எதிரான வாக்குகள் தான் இவை. தமது ஒருமித்த கருத்தை தமக்கு கிடைத்த வழிகளில் அவர்கள் வெளிப்படுத்தியுள்ளார்கள்.

எந்தவொரு பிரதான சிங்கள கட்சியின் மீதும் தமிழ் மக்களுக்கு அறவே நம்பிக்கை அற்றுப்போயிற்று என்பது தெளிவான உண்மை. இந்த முடிவினை அவர்கள் உணர்ச்சி பூர்மாக அல்லாது பிரக்ஞைபூர்வமாக வெளிப்படுத்து வதுதான் அரசியல் ரீதியில் நமது இலக்கை நோக்கி முன்னேறுவதை உத்தரவாதப்படுத்தும் என்பது அதைவிட பாரிய உண்மையாகும். இதுவே எமது விடுதலைப்போராட்டத்தை அடுத்த கட்டத்திற்கு பலப்படுத்திச் செல்ல அவசியமாகும். ஒரு

(தொடர்ச்சி 07இல்)

## தமிழருக்கு விடுக்கப்பட்டுள்ள எச்சரிக்கை:

# குமார் படுகொலை!

அகில இலங்கை தமிழ்க் காங்கிரஸ் கட்சியின் தலைவரான திரு குமார் பொன்னம்பலம் இந்த மாதம் 4ம் திகதி அன்று கொழும்பில் படுகொலை செய்யப்பட்டார். புதிய நூற்றாண்டில் அரசியற் தலைவர் ஒருவரது முதலாவது படுகொலை இது. பேரினவாத அரசின் அட்டூழியங்களையும் தமிழரின் துயரங்களையும் சர்வதேச அளவில் பிரச்சாரப்படுத்தி வந்ததன் மூலம் சர்வதேச அரங்கில் தமிழரின் குரல்களில் ஒன்றாய் குமார் ஒலித்தார். அதுமாத்திரமின்றி சிங்களப் படைகளினால் கைது செய்யப்படும் தமிழர்களுக்காக தானே நேரடியாக வாதாடியும் சோவினிச நீதிமன்றத்தையும் பயங்கரவாத தடைச் சட்டத்தையும் எதிர்த்தும் வந்தார். தமிழ் மக்களின் சுயநிர்ணயத்தை - பிரிந்து போகும் உரிமையை- பகிரங்கமாக சிங்கள ஊடகத்திலேயே அறிவித்திடுமளவுக்கு குமாரின் அரசியலில் ஒரு ஆணித்தரம் இருந்தது. அண்மைக்காலமாக குமாரின் அரசியல் சர்வதேச அரசியல் அரங்கில் தமிழரது உரிமைப் போராட்டத்தின் நியாயத்தன்மையை எடுத்தியம்பிவந்த அதேநேரம், சிறிலங்கா அரசின் சோவினிசப்போக்கையும் பொய்மைகளையும் அம்பலப்படுத்தி வந்தது. சிங்கள அரசை அதன் எல்லைக்குள்ளேயே நின்று துணிகரமாக எதிர்த்து வந்த தமிழ்த் தலைவர்களில் முக்கியமானவர்களில் குமாரும் ஒருவர் என நாம் காண்கிறோம். இவ்வகையில் குமாரின் அரசியலானது தனது தீவிர இனச் சுத்திகரிப்புக்கு இடைஞ்சலாயிருப்பதை கண்ட சந்திரிகா அரசானது அவரைப்படுகொலை செய்துள்ளது.

இதுவரையில் சிறிலங்காவில் ஆட்சிசெய்த எந்தப் பேரினவாத அரசும் பொதுநீரோட்டத்திலான, தமிழர் அரசியல் தலைவர்களை இனமுரண்பாடுகள் முற்றி கொந்தளிப்பு நிலவிய காலங்களிலும் கூட கொலை செய்த வரலாறில்லை. ஆனால் சந்திரிகா அரசோ தமிழரது பொது நீரோட்ட அரசியல் தலைமையை அழிப்ப தற்கான நடவடிக்கைகளில் இறங்கி யுள்ளது. சந்திரிகா அரசின் இப்பேரினவாத தலையெடுப்பானது இனிமேல் தமிழரின் உரிமைக் குரல் "பொது நீரோட்ட, அரசியலில்" ஒலிக்க முடியாது என எச்சரிக்கை விடுப்பதாயுள்ளது. அத்துடன் அவ்வாறு துணிந்து குரல் கொடுப்பவர்களை படுகொலை செய்வதில் தாம் உறுதியாயிருப்பதையும் அது வெளிப்படுத்தியுள்ளது.

இரண்டு மாதங்களுக்கு முன் படுகொலை செய்யப்பட்ட தினமுரசு ஆசிரியர் அற்புதராஜா (ரமேஷ்) இன் படுகொலையையும் நாம் இதனுடன் இணைத்துப் பார்க்க வேண்டியுள்ளது. ரமேஷ் தமிழ்த் தேசத்தின் அரசியலை, தமிழரின் துயரை எடுத்துக் கூறுபவராக இருந்தார். தமிழ் தேசத்தின் அரசியல் நிலைமையை பத்திரிகையூடாக உடனுக்குடன் மக்களுக்குக் கொண்டு சென்றதன் மூலம் ஒரு விறுவிறுப்பான தகவல் பரிமாற்றத்தையும் கள நிலவரங்களையும் வழங்கிவந்தார். இது தமிழரின் தேசிய உணர்வை குறிப்பிட்டளவிற்கு தொடர்ச்சியாக தட்டியெழுப்புவதாகவிருந்தது. இது தமது பேரினவாத ஆட்சிக்கு தடையான நடவடிக்கையென உணர்ந்த சந்திரிகா அரசு அவரையும் படுகொலை செய்தது.

(தொடர்ச்சி 8ம் பக்கத்தில்)

# களுத்துறையில் தாக்குதலும் கொழும்பில் கைதும் !

கடந்த வியாழக்கிழமை 6ம் திகதியிலிருந்து 7ம் திகதி மதியம் வரை கொழும்பில் தமிழர்களுக்கெதிராக ஊரடங்குச் சட்டம் பிரகடனப்படுத்தப்பட்டு வயது, பாலின வேறுபாடின்றி மூவாயிரத்துக்கு அதிகமானவர்களை சிங்களப்படைகள் கைது செய்தன.

இச்சுற்றிவளைப்பும் கூட்டுக் கைதுகளும் தலைநகரை உலுக்கிக் கொண்டிருக்கும் இதே நாட்களில் களுத்துறைச் சிறையில் தடுப்புக் காவலில் இருக்கும் நூற்றுக்கணக்கான தமிழ் அரசியல் கைதிகள் சிறைக்காவலர்களாலும் சிறைக் கைதிகளாலும் குரூரமாகத் தாக்கப்பட்டனர். இதில் ஒருவர் படுகொலை செய்யப்பட்டதுடன் ஐம்பதுக்கும் அதிகமானவர்கள் படுகாயமடைந்தனர். இது தொடர்பான அரசின் பாராமுகமும் தலையிடாமையும், தமிழர்களைக் கூட்டாகக் கைது செய்து கொன்றொழிப்பதற்கான மறைமுக அதிகாரம் படைகளுக்கும் பொலிசுக்கும் சிறைக் காவலர்களுக்கும் வழங்கப்பட்டிருப்பதையே காட்டுகிறது.

சிறிலங்காவின் ஆட்சிப்பொறுப்பை ஏற்ற ஆரம்ப காலங்களில் தமிழர் மீதான இன அழிப்பு யுத்தத்திற்கு "சமாதானத்திற்கான யுத்தம்", "தமிழ் மக்களை பயங்கரவாதத்தின் பிடியிலிருந்து விடுவிப்பதற்கான யுத்தம்" என தனது படுகொலைச்செயலுக்கு சர்வதேச அளவில் நியாயம் கற்பிக்க முயன்று வந்த சந்திரிகா, தற்போது மீண்டும் ஜனாதிபதியாக பதவியேற்று இரண்டு வாரங்கள் பூர்த்தியாவதற்குள் தமிழர் மீது பகிரங்கமாகப் போர்ப்பிரகடனம் செய்துள்ளார். இது சந்திரிகாவின் இனவெறி ஆட்சியின் தீவிர தலையெடுப்பை வெளிக்காட்டுவதுடன் சந்திரிகா இனி உலக அபிப்பிராயத்தையும் சர்வதேச சமூகத்தின் கேள்விகளையும் பொருட்படுத்தப் போவதில்லை என்பதையும் அவரது உரைகளும் சமிக்ஞைகளும் வெளிப்படுத்துகின்றன. சிங்களப் பேரினவாதத்தின் கொடுமையான பக்கத்தின் தலைவராக அவர் தனது செயற்பாடுகளை ஆரம்பித்துள்ளதற்கான அறிகுறிகள் இவை. தமிழரைப் பொறுத்தவரையில் இந்நூற்றாண்டின் ஆரம்பத்துடன் சிறிலங்காவிலும் சேர்பிய மெலஷோவிக் ஆட்சி கிளைபரப்புவதையே நாம் காணக் கூடியதாயுள்ளது.

சிங்களப் படைகள் தமிழரைக் கைது செய்வது எனும் பெயரில் முஸ்லிம்களையும் கைது செய்து துன்புறுத்தத் தொடங்கியுள்ளன. இவையாவும் அடக்கப்பட்ட ஈழத்தமிழ், மலையகத் தமிழ், முஸ்லிம் தேசங்களை சிங்களப் பேரினவாத அரசு நசுக்குவதன் மூலம் இனச் சுத்திகரிப்பில் தீவிரமாக ஈடுபடுவதற்கான சித்தாந்த அத்திவாரம் இடப்பட்டு வருகின்றது. இவற்றைக் கணக்கில் கொண்டு எமது தரப்பு நடவடிக்கைகள் அமைவதில்தான் எமது எதிர்காலம் தங்கியிருக்கின்றது.

எமது இலட்சியம் சுதந்திர தமிழீழம்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# திட்டமிட்ட சிங்கள குடியேற்றத்தை தவிர்க்க...

99 நவம்பரில் புலிகளின் வெற்றிகரமான படை நகர்வுகள் மணலாறு நோக்கி விரிவடைந்த போது அங்கிருந்த படையினர் தமது கொத்தணி இராணுவ முகாம்கள் பலவற்றை கைவிட்டோடினர். கூடவே ஆயிரக்கணக்கான சிங்கள குடியேற்ற வாசிகளும் அப்பிரதேசங்களை விட்டு வெளியேறினர். பிரதான படைமுகாம்களில் இருந்து கொடுக்கப்பட்ட எவ்விதமான உத்தரவாதங்களாலும் அவர்களின் வெளியேற்றத்தை தடுத்து நிறுத்த முடியவில்லை.

இதற்கு சற்று முன்பு 99 செப்டம்பர் மாதம் விடுதலைப்புலிகளால் அம்பாறை எல்லைக் கிராமங்களில் மேற்கொள்ளப்பட்ட சிங்கள மக்களின் படுகொலைக்குப் பின்னரும் இவ்வாறாக சில நூற்றுக்கணக்கில் சிங்கள குடியேற்றவாசிகள் வெளியேறினர். கடந்த சில வருடங்களாக இதுபோன்ற படுகொலைகள் மேற்கொள்ளப்படாது விடுதலைப் போராட்டம் சிங்கள மக்களுக்கு எதிரானதல்ல என நம்பிக்கை வலுவடைந்த போது இப்படி நடைபெற்றது நமக்கு மிகவும் அதிர்ச்சியாக இருந்தது. சிங்கள குடியேற்றவாசிகளின் மேற்படி இரண்டு வெளியேற்றங்களும் ஒரே தன்மையானவை போலத் தோன்றினாலும் அவற்றின் அரசியல் தார்ப்பரியங்களும் பலாபலன்களும் பாரியளவில் வேறுபட்டவை.

அரைநூற்றாண்டுகளாக தமிழீழத்தில் மேற்கொள்ளப்பட்டு வரும் திட்டமிட்ட சிங்கள குடியேற்றங்களினால் ஏற்பட்ட அரசியல், இராணுவ, பொருளாதார மற்றும் கலாச்சார விளைவுகளின் பாரதூரம் குறித்து பல கோணங்களிலும் பரிசீலிக்கப்பட்டுள்ளது. தமிழீழம் என்ற கருத்தாக்கத்தை இல்லாதொழிக்கும் நோக்குடன் சிங்கள ஆதிக்க சக்திகள், சிங்கள குடியேற்றங்களின் மூலம் நேரடியாக செயற்பட்டு வருவது நாமறிந்ததே. இந்தவிதத்தில் எமது விடுதலைப்போராட்ட பாதையில் திட்டமிட்ட சிங்கள குடியேற்றம் என்ற அம்சத்தை எப்படி எதிர்கொண்டு தீர்க்கப்போகின்றோம் என்பது ஒரு தீர்க்கமான விடயமாகிறது.

சிறிலங்கா அரசின் இந்த ஆக்கிரமிப்பு நோக்கத்தை முறியடிக்கும் திட்டத்துடன் கடந்த காலங்களில் சிங்கள குடியேற்ற வாசிகள் மீது விடுதலை அமைப்புகளால் தாக்குதல்கள் மேற்கொள்ளப்பட்டன. மேலும் இராணுவ நகர்வை திசைதிருப்பவும், இராணுவத்தின் ஒன்றுகுவிப்பை சிதறப் பண்ணவும் பழிவாங்கும் நடவடிக்கை எனவும் சிங்கள குடியேற்றவாசிகள் பலதடவை படுகொலை செய்யப்பட்டனர். போராட்டத்தின் கருநிலையில் இவ்வாறான வழிமுறைகளால் தாயகத்தை காப்பாற்றி விடலாம் எனக்கொண்டிருந்த, எண்ணக் கருத்துக்களை எவராலும் ஏற்றுக் கொள்ள முடியாதுவிட்டாலும், போராட்ட சக்திகளது அரசியல் முதிர்ச்சியின்மை காரணமாக இது புரிந்து கொள்ளக்கூடியதே. ஆயினும் நடைமுறையில் இதன் எதிர்வினைகளும் அரசியல் விளைவுகளும் எமது விடுதலைப் போராட்டத்தின் மீது ஏற்படுத்திய மோசமான பாதிப்புக்களிற்கும் அப்பால் இவ்வகை படுகொலைகள் நியாயப்படுத்தப்பட்டு வருகின்றன. மக்களது சிந்தனைகளும் இந்தவகை சித்தாந்தங்களால் தவறாக வழிகாட்டப்பட்டன.

சிறிலங்கா அரசினால் அரசியல் மற்றும் இராணுவ நோக்குடன் மேற்கொள்ளப்படும் திட்டமிட்ட குடியேற்றங்களில் வாழும் சிங்கள மக்களில் கணிசமானோர் ஒரு குறிப்பிட்ட காலத்தில், தமது நலன்களின் பாற்பட்டு படிப்படியே அவர்களும் இராணுவ நோக்கங்களிற்கு நேரடியாகவும் மறைமுகமாகவும் பயன் படுத்தப்படுகின்றனர். சில சந்தர்ப்பங்களில் தமிழர்கள் மீதும் இப்பிரிவினர் ஏவிவிடப்படுகின்றனர். இருந்தபோதிலும் இப்பிரச்சனையை எமது போராட்டத்தின் நீண்டகால நலனில் நின்று நோக்குவோமெனின் சிங்கள மக்களை படுகொலை செய்வதும் அதனை நியாயப் படுத்துவதும் எமது தேசிய விடுதலைக்க எதிரானதாகவே அமைந்து விடுகிறது . இந்த விதத்தில் இது மிகவும் பிற்போக்கான செயலாகும்.

மேற்படி இரு வழிமுறைகளில் மணலாற்றில் நடந்ததை ஒருதடவை திரும்பிப் பார்ப்பது நல்லது.

அண்மைக்கால மணலாறு வெற்றியானது எமக்கு தீர்க்கமான ஒரு படிப்பினையை தந்துள்ளது. எமது தாக்குதல் பலத்தில் ஆக்கிரமிப்பு இராணுவம் விரட்டியக்கப்படும்போது, திட்டமிட்ட சிங்கள குடியேற்றத்தினால் விடுதலைப் போராட்டத்திற்கு ஏற்படும் அச்சுறுத்தல் என்பது அற்ப விடயமாகி விடுகிறது. எனவே எமது வழிமுறைகளிலும் இராணுவ நோக்கங்களை மாத்திரம் கருத்தில் எடுக்காது அல்லது பழி தீர்க்கும் உணர்ச்சிகளுக்கு ஆட்படாது, நீண்ட கால அரசியல் தார்ப்பரியங்களையும் கவனத்தில் கொள்ள வேண்டும். இந்த படிப்பினையை கருத்தில் கொண்டு தொடர்சியாகவும் முரணற்றும் இப்போதும் எதிர்காலத்திலும் எமது போராட்ட வழிமுறைகள் அமைய வேண்டும்.

எமது போராட்டத்தின் வெற்றியின் முன்னேற்றப்பாதையில் இப்படியான திருப்பங்களில், ஆக்கிரமிப்பு படைகளை வெளியேற்றுவதுடன், எமது தாயகத்திலுள்ள திட்டமிட்ட சிங்கள குடியேற்றப் பகுதிகளிலுள்ள சிங்கள மக்கள் விடயத்திலும் அவர்களை வெளியேற்றுவதற்கு, எமது இலட்சியத்திற்கு முரணற்ற விதத்தில் பல்வேறு வழிகள் குறித்தும் அக்கறை கொள்ள வேண்டும். திட்டமிட்ட சிங்கள குடியேற்றங்களால், தமிழ் மக்களுக்கு ஏற்பட்ட பாதிப்புகளை மட்டுமல்ல, அரசு அந்த சிங்கள மக்களையும் கூட எப்படி தனது ஆதிக்க நலன்களுக்கு பயன்படுத்திக்கொள்கிறது என்பதையும் நாம் விளக்க வேண்டும். நமது போராட்டம் இப்போது 80 களில் அல்ல 90 களையும் தாண்டி புதிய நூற்றாண்டில் காலடி பதிக்கின்றது. விடுதலைப்போராட்டதின் பெயரால் நமக்கு நாமே போட்டுக்கொண்ட பல விலங்குகள் உள்ளன. இவற்றை ஒவ்வொன்றாக நாமே தகர்த்தெறிய வேண்டும்.

# சிரிய — இஸ்ரேலிய ஒப்பந்தமும் மத்தியகிழக்கின் எதிர்காலமும்

பலதசாப்தங்களாக கொந்தளிக்கும் பூமி. பல ஆக்கிரமிப்பாளர்களின் முரண்பாடுகள் சங்கமித்து பல ஆயிரம் பலஸ்தீனியர்களையும் மற்றும் அரபு மக்களையும் பலி கொண்ட பிரதேசம். ஒரு தேசத்தின் இருப்பை குலைத்து சியோனிச அரசை நிறுவிய ஏகாதிபத்தியங்கள் இன்னமும் தனது பிடியின் கீழ் ஆசியாவின் இதயமாகிய மத்தியகிழக்கை முற்றிலுமாக கொண்டு வருவதற்காக மேற்கொள்ளும் எத்தனிப்புகள் பல.

அண்மைக்காலமாக திரைமறைவிலும் வெளிப்படையாகவும் சிரியாவிற்கும் இஸ்ரேலுக்கும் இடையே நடைபெற்றுவந்த பேச்சுவார்த்தைகள் ஒரு தீர்வை நெருங்கிக் கொண்டிருப்பதாக ஊடகங்கள் தெரிவிக்கின்றன. 1967 இல் மத்தியகிழக்கின் பல பிரதேசங்களை ஏகாதிபத்தியங்களின் உதவியுடன் ஆக்கிரமித்தது இஸ்ரேல் அரசு. இதில் சிரியாவிற்கு சொந்தமான கோலான்குன்று பிரதேசமும் ஒன்றாகும். ஐ.நா தீர்மானங்கள் பலவற்றை மீறி இப்பிரதேசத்தை விஸ்தரித்துக் கொண்டதுடன், இங்கு யூதகுடியேற்றங்களை தொடர்ச்சியாக நிறுவியது இஸ்ரேல். இதன் காரணமாக சிரியாவிற்கும் இஸ்ரேலுக்கும் இடையில் முடிவற்ற மோதல் இன்றுவரை நீடித்து வருகின்றது. இந்த இரண்டு நாடுகளுக்கும் இடையில், சின்னஞ்சிரிய நாடாகிய லெபனான் திண்டாடிக் கொண்டிருக்கின்றது. இஸ்ரேலிய குண்டுத்தாக்குதல்களால் சல்லடையாக்கப்பட்டுள்ளது. அமெரிக்க தலையீட்டுடன் இஸ்ரேலிய - சிரிய பிரச்சனையை முடிவிற்கு கொண்டு வருதற்கு இறுதிக்கட்ட முயற்சிகள் தற்போது நடைபெறுகின்றன.

இஸ்ரேலுக்கு எதிரான பல்வேறு பலஸ்தீன போராட்ட குழுக்களுக்கும் தளம் தந்து உதவி செய்து வந்த சிரிய அரசுக்கு, தான் ஆக்கிரமித்த கோலான் குன்றுகளை மீள ஒப்படைத்து தனது நீண்ட கால நலன்களை பாதுகாத்து கொள்ள இஸ்ரேலிய அரசு தீர்மானித்துவிட்டது. மிக பலமான ஒருமைப்பாட்டை கொண்டிருந்த அரபுநாடுகளால் சுற்றிவளைக்கப்பட்டிருந்த இஸ்ரேல், தமது எஜமானர்களின் உதவியுடன் முதலில் எகிப்துடனும். அடுத்து ஜோர்தான் தற்போது சிரியா ஆகிய நாடுகளுடன் தனது முன்னய ஆக்கிரமிப்பினால் கைப்பற்றிய பிரதேசங்களை மீளகையளிப்பதன் மூலம் அரசியல், இராஜதந்திர உறவுகளை வலுப்படுத்திக் கொண்டதுடன், அரபுலக ஒருமைப்பாட்டை பலவீனப்படுத்தி வருவதிலும் வெற்றி கண்டு வருகின்றது. இந்த அணுகுமுறைகளில் காட்டும் வேகத்தை பலஸ்தீன பிரச்சனையை முடிவிற்கு கொண்டு வருவதில் காட்டாது இழுத்தடித்து வருவது நன்கு அறிந்ததே. இந்நிலையில் பலஸ்தீன பிரச்சனையைத் தீர்ப்பதற்கு மிகுந்த




அழுத்தம் கொடுத்து வந்த சிரியாவை தனது வழிக்கு கொண்டு வந்து, பலஸ்தீன பிரச்சனையை சியோனிச அரசு மேலும் இழுத்தடிக்கப்போவதற்கான வாய்ப்புகள் தெரிகின்றன.

கடந்த காலங்களில் அரபுநாடுகள் தமது அதிகார அரசியலுக்காக ( power politics) பலஸ்தீன பிரச்சனையை பல்வேறு விதமாக பயன்படுத்திக் கொண்டன. தற்போது பலஸ்தீனர்களின் அடிப்படை உரிமைகள் தொடர்பான மிக முக்கிய விடயங்களை தீர்க்க வேண்டிய ஒரு கட்டத்தில் இஸ்ரேல்- சிரிய உறவு என்பது பலஸ்தீன நோக்கங்களுக்கு மேலும் ஒரு பின்னடைவை ஏற்படுத்தும் வாய்ப்பை கொண்டுள்ளதாக தெரிகிறது. பலஸ்தீனத்தின் விடுதலைக்காக மிக நீண்டகாலமாக ஒப்பீட்டளவில் அதிகமாக உதவி வரும் சிரிய அரசுத்தலைவர் அசாட், தனது அரசியல் வாழ்வின் இறுதிக் கட்டத்தில் பலஸ்தீனர்களுக்கு துரோகம் இழைக்கும் நிலைக்கு இறங்கமாட்டார் என வாதிடப்பட்டாலும் அண்மைக்கால வரலாறு இந்த வாதத்திற்கு உத்தரவாதமளிப்பதாக இல்லை.

சோவியத்தகர்வு, பிஎல்லோ வினுள் ஏற்பட்ட அக முரண்பாடுகளின் அழுத்தம், வலைகுடா போரில் தனிமைப்படுத்தப்பட்ட ஈராக் இனை அரபாத் ஆதரித்து நின்றமை யாவும் பலஸ்தீன போராட்ட தரப்பை ஒரு பலவீனமான நிலைக்கு சடுதியாக தள்ளியிருந்தது. மறுபுறம். பலஸ்தீனியர்களின் கெரில்லா மற்றும் இன்டிபாதா போராட்டங்களின் தீவிரம், இஸ்ரேல் பொருளாதாரத்தில் கடுமையான வீழ்ச்சி, சமாதானம் கோரி இஸ்ரேலில் ஏற்பட்டு வந்த கணிசமான அகஅழுத்தம் போன்ற காரணங்கள் சியோனிச அரசினை தனது ஆக்கிரமிப்பு நிலைப்பாட்டில் இருந்து கணிசமாக இறங்கி

(தொடர்ச்சி 03இல்)



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# அடக்கப்பட்ட தேசங்கள் ஓரணியில்...

கடந்த டிசம்பர் மாதம் இறுதிப் பகுதியில் சிறுபான்மை மக்கள் ஐக்கிய முன்னணி எனும் அமைப்பொன்று கொழும்பில் உருவானதும் இதன் தலைவராக படுகொலைசெய்யப்பட்ட திருகுமார் பொன்னம்பலம் இருந்ததும் யாரும் அறிந்ததே. பல்வேறு தமிழ் அரசியல் அமைப்புகளும் கொழும்பை மையப்படுத்தி செயற்பட்டு வருகையில் இச் சிறுபான்மை மக்கள் ஐக்கிய முன்னணிக்கு மாத்திரம் சொல்லத்தக்க விசேஷத்துவம் என்ன உண்டு என வாசகர் கேட்கலாம். இவ்வமைப்பானது சிங்கள சோவினிச அரசின் அடக்குமுறைக்குள்ளாகி வரும் ஈழத்தமிழ், மலையகத் தமிழ், முஸ்லிம் தேசங்களினை பிரதிநிதித்துவப் படுத்தும் அரசியல் சக்திகளின் இணைவால் உருப்பெற்றதாகும். இன்றைய சூழலில் இத்தகைய அமைப்பொன்றின் உருவாக்கம் குறிப்பிடதக்கதாகும்.

வளர்ச்சிபெற்ற சிங்கள சோவினிசத்தின் அட்டூழியங்களுக்கு ஈழத்தமிழர், மலையகத்தமிழர், முஸ்லீம்கள் வெவ்வேறு வழிகளிலும் பலியாகி வருகின்றனர். ஈழத்தமிழர் மீது நேரடி யுத்தப்பிரகடனம் செய்து அவர்களை



அழித்தொழிக்கும் சோவினிச அரசு, அதேயளவு கணதியுடன் மலையகத் தமிழரை கைது செய்வதும், பொலிசையும் குண்டர்களையும் கொண்டு வன்முறைப் படுகொலைகளை மேற்கொள்வதன் மூலமும் தொடர்ந்து இவர்களை அச்ச சூழலில் வாழவிட்டுள்ளது. தற்போது முஸ்லிம் மக்களின் மீதும் சிங்கள சோவினிசத்தின் வன்முறை பரவத் தொடங்கியுள்ளது. அரசியல்சமூக ரீதியில் ஓரங்கட்டுதல், ஆங்காங்கு தாக்குதல்களை மேற்கொள்ளுதல், அச்சுறுத்துதல், முஸ்லிம் எனத் தெரிந்தும் கைது செய்வது போன்ற நடவடிக்கைகளால் முஸ்லீம் தேசத்தையும் தனது இனச் சுத்திகரிப்பு வியூகத்திற்குள் கொண்டுவரும் முயற்சிகளில் சிங்கள அரசு இறங்கியுள்ளது. இந்நிலையில் தமது உயிர்வாழ்தலை உத்தரவாதப்படுத்திக்கொள்வதற்கான அடிப்படை நடவடிக்கையிலிறங்க வேண்டிய தேவை இம்மூன்று தேசங்களுக்குமுண்டு.

இதுவரையில் இம்மூன்று தேசங்களும் தத்தம் வழியில் பேரினவாதத்தை எதிர்த்து செயற்பட்டு வந்திருப்பினும் வரலாறானது அடக்கப்பட்ட தேசங்களின் கூட்டிணைவின் தேவைக்குரிய காலகட்டத்திற்கு வந்துவிட்டது. இதன் விளைவே ஈழத்தமிழ், மலையகத் தமிழ், முஸ்லிம் அரசியல் அமைப்புகளின் கூட்டிணைவும் சிறுபான்மை மக்கள் முன்னணியின் உதயமுமாகும்.

இதேபோல் இம்மூன்று தரப்பும் கூட ஒன்றுக்கொன்று அரசியல் தளத்தில் இடையீடு செய்ய நேர்கிறது. தமிழீழ முஸ்லீம்களின் உரிமை, மலையகத்தமிழர் வாழ்விடப்பகுதிகளில் திட்டமிட்ட முஸ்லீம் குடியேற்றம் போன்றவற்றில் இத்தகைய அரசியல் தலைமை மிகவும் புரிந்துணர்வுடனும் பொறுப்புணர்வுடனும் செயற்பட வேண்டியுள்ளது. அப்பொழுதே தமது கூட்டிணைவின் வழிகாட்டலில் அடக்கப்பட்ட தேச மக்களிடையேயான பரஸ்பர நல்லுறவு நம்பிக்கையை வளர்த்து மக்களையும் அரசியலில் பங்குதாரராக்கிட முடியும். திட்டமிட்டே அடக்கப்பட்ட தேசங்கள் தமக்கிடையே மோதிக்கொள்வதற்கு பல்வேறு சூழ்ச்சிகளையும் செய்துவரும் சோவினிச அரசு இத்தகைய அமைப்பை சிதைப்பதற்கும் தேசங்கள் தமக்கிடையே மோதிக்கொள்வதற்குமான சதிகளை இப்பொழுதிலிருந்தே தீட்டத் தொடங்கியிருக்கும்.

வரலாற்று வழியில் திட்டமிட்டோ எதேச்சையாகவோ இவ்வமைப்பு உருவாகிவிட்டது. இதன் அரசியல் குறிக்கோளை உயர்ந்தபட்சம் வளர்த்தெடுப்பதும் குறுகிய லாப நோக்கங்களுக்கு மாறாக விரிவான ஜனநாயக உணர்வுடனும் பரஸ்பர ஒத்துழைப்புடனும் பேரினவாத்திற்கெதிரான போராட்டத்தை முன்னெடுப்பதும் பேரினவாதத்தை எதிர்க்கும் அனைவரதும் கடமையாயிருக்கிறது. அடக்கப்பட்ட தேசங்கள் தமது உயிர்வாழ்தலுக்கான போராட்டத்தை கூட்டாக முன்னெடுக்க புரிதலுக்கு வந்திருக்கும் இந்நிலையில், தொடர்ந்தும் பேரினவாத அரசை சார்ந்திருந்து கொண்டு அடக்கப்பட்ட தேசங்களின் நலனை முன்னெடுக்கும் சக்திகளுக்கு விரோதமாக செயற்பட முனைபவர்கள் துரோகிகளே என்பதிலும் நாம் தெளிவாயிருப்போம்.

## சிரிய...

(2ஆம் பக்கத் தொடர்ச்சி)

வரச்செய்திருந்தது. இந்த வாய்ப்பை ஏகாதிபத்திய முகாம்கள் உலகை ஒழுங்கை மறுசீரமைக்கும்தமது பிரபலமான கோசத்துடன்நன்கு பயன்படுத்திக்கொள்ள முன்வந்துள்ளன. இதன் இறுதி இலக்கு ஏகாதிபத்திய நலன்களை தொடர்ந்து வேறுவடிவில் மத்தியகிழக்கில் பாதுகாப்ப தாகவே அமையும்.

தற்போது இஸ்ரேலுடன் தீவிர பகைமை பாராட்டும் நாடுகளாக, ஈராக்கும் அடுத்து ஈரானும் உள்ளது. அரபுலகின் முதன்மை தலைமை பாத்திரத்திற்காக கடந்த காலங்களில் எகிப்து, ஈராக், சிரியா சவுதி போன்ற நாடுகள் முனைந்து வந்துள்ளன. இதில் அரபு நாடாக அல்லாத ஈரானும் புரட்சிக்கு பின்பு இந்த திசையில் செயற்பட்டு வந்துள்ளமை குறிப்பிட தக்கதாகும். இச்சூழலில் இஸ்ரேலுக்கு எதிரான தீவிர நிலைப்பாட்டை ஈரானின் முக்கிய அரசியல்பிரிவினர் முன் வைத்துள்ளனர். சியோனிசஅரசு நிலைக்கும் வரை பலஸ்தீனர்களுக்கு மட்டுமல்ல எந்தவொரு இஸ்லாமிய நாட்டிற்கும் விடிவு கிடையாது என்ற அர்த்தத்தில் பகிரங்க நிலைப்பாட்டை இத்தரப்பு எடுத்துள்ளது. ஆப்கான், பாகிஸ்தான், மற்றும் மத்திய கிழக்கிலுள்ள இஸ்லாமிய மக்கள் மத்தியிலும் அரபு நாடுகள்மத்தியிலும்தமது ஆதரவை உறுதிப்படுத்திக்கொள்வதுடன் ஈரானுக்குள் அரசுக்கு எதிராக ஏற்பட்டு வரும் உணர்வுகளை தற்காலிகமாக தனிக்கவும் இந்த நிலைப்பாடு உதவும்.

ஈரானில் ஏகாதிபத்தியத்திற்கு எதிரான போக்குகள் ஒருபுறமும், மிதவாத போக்குகளுக்கும் இடையே வேறுபாடுகள் அதிகரித்து வருகின்றன. அண்மைக் காலமாக ஈரான் ஐரோப்பிய நாடுகளுடன் பொருளாதார மற்றும் இராஜதந்திர உறவுகளை வலுப்படுத்துவதில் முனைப்பை காட்டி வருகின்றது. இதற்கு எதிரான போக்குகளும் ஈரானில் அதிகரித்து வரும் சூழலில் , இஸ்ரேல் , அமெரிக்க கூட்டுச் சதிக்கு எதிரான தீவிர நிலைப்பாட்டை ஈரானிய தரப்பு எடுத்துள்ளதை புரிந்து கொள்ள முடியும்.

தற்போது மாறி வரும் சர்வதேச சூழலில், அரசுகளுக்கிடையிலான, அதிலும் நீண்ட காலமாக முரண்பாடுகளை கொண்டிருந்த அரசுகளுக்கிடையிலான உறவுகளிலும் வேகமாக மாற்றம் ஏற்பட்டு வருகின்றதை காணமுடிகின்றது. அந்தந்த நாடுகளில் நிலவும் அகமாற்றங்களும் அதனால் ஏற்பட்டு வரும் அழுத்தங்களும் அணிசேர்க்கை மாற்றங்களும் இந்த விதமாக எதிர்பாராத திருப்பங்களுக்கு வழிசமைக்கின்றன. இந்த மாற்றங்களையும் இதற்கு பின்னணியாக உள்ள நிலைமைகளையும் ஆழமாக பரிசீலித்து பற்றிக் கொள்வது எமது போராட்டத்தை சரியான திசையில் கொண்டு செல்லவும், எதிர்பாராத அரசியல் திருப்பங்களில் நாம் ஆக்கிரமிப்பு நோக்கம் கொண்ட வலுவான அரசுகளின் பிடிகளுக்குள் வீழ்ந்து விடாதிருக்கவும் எமது சொந்த மக்களின் நலன்களை எப்போதும் விட்டுக்கொடாது பாதுகாப்பதற்கும் அவசியமாகும்.

## மரணதண்டனைக் கெதிரான கூட்டமைப்பு!!!

ராஜிவ்காந்தி மரணத்துடன் தொடர்பு பட்டதாகக் குற்றஞ்சாட்டப்பட்டுள்ள நளினி, முருகன், பேரறிவாளன், சாந்தன் ஆகிய நான்கு பேருக்கும் இந்திய நீதிமன்றம் விதித்துள்ள மரண தண்டனையை இரத்து செய்யும்படிக் கோரி தமிழகத்தின் பல பகுதிகளிலுமிருந்தும் எதிர்ப்புக் குரல்கள் ஒலித்த வண்ணமுள்ளன. தனிநபர்களாகவும் அமைப்புகளாகவும் இம்மரண தண்டனைக்கெதிராக பெண்களும் ஆண்களும் கடந்த நவம்பர் மாதம் 30ம் திகதி சென்னையில் அணிதிரண்டு ஆர்ப்பாட்டம் நடத்தியதும் குறிப்பிடத் தக்கது. தமிழீழ விடுதலைப்போராட்டத்திற்கெதிராக இந்திய அரசு தனது நடவடிக்கைகளை தீவிரப்படுத்தி வரும் நிலையில் துணிகரமாக இவ்வார்ப்பாட்டத்தை நடத்தியவர்களை ஈழதேசம் போற்றுகிறது. திரைப்படத்துறையினர் முதல் எழுத்தாளர்கள் வரை பல்வேறு விதமான நடவடிக்கைகள் இம்மரணதண்டனைக்கு எதிராக எடுக்கப்பட்டு வருகின்றது.

இது இப்படியிருக்க, புலம்பெயர் நாடுகள் பலவற்றிலும் கூட மரண தண்டனைக் கெதிராக ஈழத் தமிழர்கள் குரல் எழுப்பி வருகின்றனர். புலம்பெயர் நாடுகளிலும் தமிழகத்திலும் உருப்பெற்றுள்ள இம் மரணதண்டனைக் கெதிரான நடவடிக்கைகள் ஒருங்கிணைக்கப்பட்டு வழிநடாத்தப்படுவதும் ஒரு அமைப்பாக்கப் படுவதன் அவசியத்தையும் இந்நிகழ்வுகள் பறைசாற்றுகின்றன. தமிழீழ விடுதலைப் போராட்டத்துடன் தொடர்புடைய ஒரு சர்வதேசிய அரசியல் நிகழ்வாக இம்மரண தண்டனைத் தீர்ப்பிருக்கையில் அது (தொடர்ச்சி 08இல்)

## உழவர் தினம்

புத்தாயிரமாம் ஆண்டின் முதலாவது உழவர் தினத்தை கொண்டாடும் அனைத்து மக்களுக்கும் தமிழீழ மக்கள் கட்சி புரட்சிகர நல் வாழ்த்துக்களை தெரிவிக்கின்றது. நமது தேசத்தின் மிகப்பிரதான கூறுகளில் ஒன்றாக அமைந்திருக்கின்ற விவசாய மக்களின் பெருமையையும், மாண்மையும் வெளிப்படுத்தி நிற்கின்ற இந்நாளில், அம்மக்களுடன் இணைந்து நாமும் தேசத்தின் அனைத்து மக்களும் இத் திருநாளை கொண்டிடுவதை சிறப்பு மிக்க நிகழ்வாக கொள்வோம். சிறிலங்கா அரசின் ஆக்கிரமிப்பிலிருந்து விடுதலை பெற்று, உழைக்கும் விவசாய மக்களை பிரதானமாக கொண்ட புரட்சிகர தமிழீழ மக்கள் குடியரசை நிறுவுவதற்கான நமது போராட்டத்தில், நமது மக்களின் ஐக்கியத்தை வெளிப்படுத்துவதாக இந்நாளை கொண்டாடுவோம். புதிய ஆண்டு, புதிய நூற்றாண்டு, புதிக சகத்திரம் நமது விடுதலையை உரத்து ஒலிக்கும்!



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# யுத்தத்திற்கான தேர்தல்

சிறிலங்கா அரசுத்தலைவருக்கான தேர்தல் முடிந்துவிட்டது. எமது அரசியல வாழ்வுடன் தொடர்பற்ற இத்தேர்தலை பகிஷ்கரிப்பதன் மூலமோ அல்லது வாக்குகளை செல்லுபடியற்றதாககுவதன் மூலமோ சிறிலங்கா அரசுககட்டமைப் பிற்குள் அடக்கப்பட்டிருப்பதை நாம் எதிர்க் கின்றோம் என்பதையும், இறைமைமிக்க தமிழீழ குடியரசின் சுதந்திர பிரஜைகளாக நாம் வாழ விரும்பு கின்றோம் என்பதையும் வெளிப் படுத்த முடியும் என்று நமது மக்க ளிடம்கருத்து தெரிவித்திருந்தோம். எனினும் நமது மக்கள் வாக்க ளிக்கக்கூடியதாக இருந்து இடங்க ளில் வழமையான அளவில் வாக்க ளித்ததோடு, ரணில்விக்கிரமசிங்க விற்கு பெரும்பான்மை வாக்குக ளையும் அளி த்துள்ளனர். இந்த நிகழ்வு முக்கியமானது. நமது மக்கள் ரனிலுக்கு வாக்களிப்பதன் பின்னணியில்இழையோடுகின்ற அரசியலை புரிந்து வெளிப்படுத்துவது அவசியமானதும் கூட. இதே போன்று இத்தேர்தலில் சிங்கள மக்கள்சந்திரிகாவிற்கு பெரும்பான்மையாக வாக்களித்திருப்பதிலுள்ள அரசியலை புரிந்து கொள்வதும் அவசியம்.

ஒரு குறிப்பிட்ட கட்டத்தில், குறிப்பிட்ட நிகழ்வு தொடர்பாக திரட்சியடைகின்ற வெகுசன உணர்ச்சியானது வெவ்வேறு வடிவங்களில் வெளிப்பட முடியும் என்பதை முதலில் மனதில் கொள்வோம். இங்கு ரனிலுக்கு வாக்களித்திருப்பதன்மூலம்நமது மக்கள் சந்திரிக்காவின் யுத்த அரக்கத் தனத்திற்கு எதிரான தமது உணர்ச்சிகளை வன்மையாக வெளிப் படுத் தியுள் ளனர். சமாதான முகமூடியை அணிந் திருந்த சந்திரிகாவின் முகத்தில் நமது மக்கள் அரசியல் எச்சிலை உமிழ்ந்துள்ளனர்.

இன்றுவரை, நமது மக்க ளின் துயரங் களை அரசியல் உரிமைகளை அலட்சியப்படுத்தி வந்திருக்கின்ற ரனிலிடமிருந்து, சிறிலங்கா படைகளுக்கு எதி ரான நமது மக்களின் தீரமிக்க ஆயுதப்போராட்டத்தை உண் ணியுத்தம் என கேவலப்படுத் தியி ருந்த ஒருவரிடமிருந்து எதையும் எதிர் பார்த்திருக்க முடியாது, எதிர்பார்க்கவும் முடியாது. எனவே நமது மக்கள் ரனிலுக்கு வாக்களித்திருப்பது என்பது அவர் மீது கொண்ட நம்பிக்கையிலோ அல்லது அரசியல் எதிர்பார்ப்பின் அடிப் படையிலோ அமைந்திருக்க வில்லை. மாறாக, சிறிலங்கா அரசு நமது மக்கள் மீது தொடுத்துள்ள ஆக்கிரமிப்பு யுத்தத்திற்கு எதிரான நமது மக்களின் உணர்வுத்திரட்சியின் வெளிப் பாடாகவே இது அமைந்துள்ளது. சிறி லங்கா அரசுக்கெதிராக நமது மக்க ளின் மனங்களில் திரண்டிருக்கின்ற உணர் ச்சிகள் தான். அந்த அரசின் தலைவராக உள்ள சந்திரிகாவிற்கு எதிராக வாக்க ளித்தல் என்ற வடிவில் வெளிப்பட்டுள்ளது.

எனினும் நமது மக்களிடையே சிறிலங் காக அரசுக்கெதிராக திரண்டுள்ள உணர்வு கள் இன்னமும் தெளிவாக பிரக்ஞைப்படுத் தப்படாமலும் இலக்கு நோக்கி குவிக்கப் படாமலும் உளளன. இதனால்தான், சிறி லங்கா அரசுத்தலைவரை தெரிவு செய்வ தற்கான தேர்தல்களின்போது, ஒரு சிங்கள தலைவருக்கு பதிலாக இன்னொரு சிங்கள தலைவருககு வாக்களிக்கும் நிலை நமது மக்களுக்கு நேர்கின்றது. சிறிலங்கா அரசுத்தலைவருக்காக இடம்பெற்ற ஒவ்வொரு தேர்தலிலும் நமது மக்கள் ஆட்சியிலுள்ள தலைவருக்கு எதிராக வாக்களித்து வந்திருப்பதை இத்தகைய பின்னணியில் புரிந்து கொள்ள முடியும்.

இந்நிலை, மாற வேண்டும், மாற்றப்பட வேண்டும். ஒரு சிங்கள தலைவருக்கு பதி லாக இன்னொரு சிங்கள தலைவருக்கு வாக்களிப்பதன் மூலம் நமது அரசியல் உரிமைகளை நாம் அனுவிப்பதற்கு எத்த கைய சாதகமான விளைவுகளும் ஏற்பட மாட்டாது. இதற்குமாறாக, இத்தகைய தேர்தலை நாம் பகிஷ்கரிப்பதன் மூலம் தேசிய அளவிலும் சர்வதேச அளவிலும் நமது அரசியல் கோரிக்கைகளும், அரசியல் உரிமைகளும் வலிமையும் அக்கறையும் பெறக்கூடிய சாத்தியம் மேலும் அதிகரிக்கும். இந்த உண்மைகள் ஒரு வெகுசனப் புரிதலாக நம்மத்தியில் நிலைபெற வேண்டும். இவ்வாறான வெகுசனப்புரிதல்தான், சிறிலங்கா அரசை நாம் முற்றாக நிராக ரித்து நமக்கான சொந்த அரசை நிர்மா ணிக்கும் இலக்கில் எம்மை திடமாக இட்டுச்செல்லும்.



இத்தேர்தலில் சிங்கள மக்கள் வாக்களித்திருக்கும் முறையானது, பல காரணிகளால் தீர்மானிக்கப்பட்டிருக்கின்ற போதிலும் அவர்கள் ஆக்கிரமிப்பு யுத் தத்திற்கு எதிராகவும், தமிழ் மக்க ளுக்கு உண்மையான சமாதான சூழலை ஏற்படுத்துவதற்காகவும் வாக்களிக்கவில்லை என்பதை தெளி வாக அவதானிக்க முடியும். சிங்கள் மக்கள் மிகப்பெரும்பான்மையாக வாழ்கின்ற வட மத்தி, வடமேல், மற்றும் தென் மாகாணங் களிலும், இன்னும் பாரம்பரியமாக யு.என்.பி. யின்வாக்கு வங்கிகளாக இருந்து வந்த பல கரையோர சிங்கள தொகுதிகளிலும், மற்றும் முற்றிலும் சிங்கள மக்களே வாழ் கின்ற ஜெயவர்த்தனபுர கோட்டை போன்ற பகுதிகளிலும் சந்திரிகாவிற்கு கிடைத் திருக்கின்ற 55 வீதத்திற்கு அதிகமான வாக்குகள் இதனை நிருபிக்கின்றன. சந்திரிக்கா வெடிகுண்டுத்தாக்குதலுக்கு உள்ளானதால்ஏற்பட்ட அனுதாப அலையே இப்பெருமளவு வாக்குகளிற்கு காரணமாகும் என்ற வாதமானது இத்தாக்குதலுக்கு முன்பே மேற்கொள்ளப்பட்ட கருத்துக் கணிப்புகள் சந்திரிக்கா வெற்றி பெறுவார் என்பதை காட்டியதன் மூலமும், அளிக்கப் பட்டு விட்ட தபால்வாக்குகள்சந்திரிகா விற்கு பெரும்பான்மையை வழங்கியிருந் ததன் மூலம் வலுவிழந்து போகின்றது.

தேர்தல் முடிவுகள் குறித்து கருத்து களை முன்வைத்து வரு கின்ற சிங்கள அரசியல்வா திகளும், சிங்கள மற்றும் ஆங்கில ஊடகவியலாளர்களும் சந்திரி காவின் தெரிவு என்பது, புலிகளு டனான யுத்தத்தை நடாத்துவ தற்கு சிங்கள மக்கள் அளித்தி ருக்கும் ஆணை என்றும், சிறு பான்மை மக்கள் சந்திரிகாவிற்கு ஆதரவு அளிக்காததால், அவர்க ளின் அரசியல் கட்சிகளுக்கு அரசாங்கம் இன்றுவரை அளித்து வருகின்ற அர்த்தமற்ற முக்கியத் துவத்தை கைவிட வேண்டும் என்றும் வலியுறுத்தி யுள்ளன. மேலும் இரு பிரதான சிங்கள கட்சிகளும் ஒன்றுபட்டு தனிச் சிங்கள தேசிய அரசாங்கத்தை அமைக்க வேண் டும் என்றும் அழுத்தம் கொடுத்து வருகின்றனர்.

இதுவே எதார்த்த நிலையாகும். சிறிலங்கா அரசின் மையத்திலிருந்து இங்குள்ள மற்ற சமூகங்களை அகற்று வதும், இவற்றை சிறிலங்கா அரசின் முற்றான ஆக்கிரமிப்பிற்குள் கொண்டு வருவதுமே சிங்கள-பௌத்த இனவாதத்தின் அடிப்படை இலக்காக இருந்து வருகின்றது. சிறலங் காவில் இடம்பெற்று வந்திருக்கின்ற ஒவ் வொரு பாராளுமன்ற மற்றும் ஜனாதிபதி தேர்தலும், தேர்தலின் பின்பான அரசியல மைப்பு மாற்றங்களும் இந்த இலக்கு நோக்கியே நகர்ந்து வந்திருக்கின்றது. இத்தேர்தலும்கூட, இத்தகைய போக்கிற்கு விதிவிலக்காக அமையமாட்டாது என்பதை சிறிலங்காவில் தற்போது இடம் பெற்று வருகின்ற பல்வேறு நிகழ்வுகள் தெளிவாக எடுத்துக் காட்டுகின்றன. நமது மக்கள்மீதான சிறிலங்கா அரசின் அடக்கு முறைகளும் அது மேற்கொண்டுள்ள ஆக்கிரமிப்பு யுத்தமும் மேலும் தீவிரமடைவதற்கான முனைப்புகள் ஏற்கனவே தொடங் கிவிட்டன.

சந்திரிகா அரசாங்கமானது தனது தேர்தல் வெற்றிக்கு யுத்த வெற்றிகளில் தங்கியிருக்கின்றது என சிலர் முன்வைத் துள்ள கூற்று, இத்தேர்தலிலும் பொய்யாக் கப்பட்டுள்ளது. வன்னியில் சிறிலங்கா படைகளுக்கு ஏற்பட்டுள்ள படுதோல் வியானது, சந்திரிகாவின் வெற்றியை எவ்விதத்திலும் பாதிக்கவில்லை என்ற உண்மையை மனதில் இருத்துவோம்! மறுபுறம், ஒவ்வொரு தேர்தலின்பின்பும், தமிழ் மக்கள் மீதான சிறிலங்கா அரசின் அடக்குமுறைகளும் ஆக்கிரமிப்பு நடவடிக் கைகளும் மேலும் தீவிரமடைந்து வந்திருக் கின்றன என்ற உண்மையில் எமது அக்க றையை குவிப்போம்! எதிர்வரும் நாட்களில் நமது மக்கள் மீது சிறிலங்க அரசு மேற் கொள்ள கூடிய மிகக் கடுமையான ஆக்கிர மிப்பு நடவடிக்கைகளை எதிர்த்து முறிய டிப்பதற்கான செயன்முறைகளில் நாம் தீவிர கவனம் கொள்வோம்! இத்தகைய செயன் முறைகள் இராணுவரீதியாக மாத்திரமன்றி அரசியல் ரீதியாகவும் அமையக்கூடிய வகையில் நமது செயற்திட்டங்களை வகுப்போம்! இத்தகைய செயற்திட்டங் களை தேசியரீதியிலும் சர்வதேச ரீதியிலும் தொடர்ச்சியாக முன்னெடுப்போம்!

ஒரு மாபெரும் வெகுசன இயக்கததை தொடர்ச்சியாக நாம் முன்னெடுப்பதற்கான காலம் வந்துவிட்டது. தமிழீழத்தில் வாழ்கின்ற நம் மக்களோடு, புலம்பெயர்ந்து நமது மக்களும் சிறிலங்கா அரசின் அடக்கு முறைக்கும் ஆக்கிரமிப்பு யுத்தத்திற்கும் எதிராக உறுதியான தொடர்ச்சியான வெகுஜன போராட்டத்தை முனனெடுக்க வேண்டிய கட்டம் உருவாகியுள்ளது. நாம் அடைகின்ற இராணுவ வெற்றி மட்டுமல்ல, அரசின் ஆக்கிரமிப்பு யுத்ததிற்கும், அடக்குமுறைகளுக்கும் எதிராக சர்வதேச அரங்கில் நாம் அடைகின்ற அரசியல் வெற் றியும் நமது மக்களை பாதுகாப்பதில் உறுதி யான அரணாகவும், நமது மக்களின் உரி மைகளை வென்று கொள்வதற்கான வழிமுறையாகவும் அமையக்கூடியது. இந்த உண்மைகளை தெளிவாக புரிந்து கொள்வோம்! இத்தகைய புரிதல் நமது ஒருங்கிணைந்த செயற்பாடுகளுக்கான உந்துவிசையாக அமையட்டும்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# சீதனமுறைமை: பொருளாதாரச் செயற்பாடா? அதிகாரத்துவத்தின் வெளிப்பாடா?

சீதனமுறைமையைக் பற்றி நாம் கதைக்கத்தொடங்கும்போதே அதுநம்மில் பலருக்கும் சலிப்பை ஏற்படுத்துவதாக இருக்கிறது. இதைத் தானே காலங்காலமாக கதைத்து வருகிறீர்கள். இது கடந்தகால சீர்திருத்த முழக்கங்களில் ஒன்று என்கின்றனர். உண்மையில் சீதனமுறைமையைப் பற்றிய உரையாடலானது கடந்த காலத்திற்குரியதா? அதுசமூகத்தில் இன்னும் நிலவி மானுட ஜீவிகளான பெண்களையும் சடப்பொருட்களான சொத்துக்களையும் ஒரே நேர்கோட்டில் நிறுத்தி பேரம் பேசலுக்குள்ளாக்கும் நிபந்தனைகள் விதிக்கும் பண்பை நாம் எவ்வாறு புரிந்துகொள்ளப் போகிறோம் என்பனவெல்லாம் இன்னும் நமக்குள் கேள்விகளாகவே இருக்கின்றன.

சீதனமுறைமையைப்பற்றி வரைவிலக்கணங்கள் தரமுற்படும் பலரும் சீதனமுறைமையின் மூலமானது தாய்வழிச் சொத்திலிருந்தே ஆரம்பிக்கிறது எனவும், தாய்வழிச் சொத்து பெண்ணுக்கு வழங்கப்படுவது நியாயமானதே எனவும் கூறுகின்றனர். இதில் மறுப்பதற்கெதுவுமில்லை. ஆனால் இன்றைய நிலையில் சீதனமுறைமையானது தாய்வழிச் சொத்தின் பெண்வாரிசுக்கான தலைமுறைக்கையளிப்பாக இல்லாது ஆணினால் பெண்ணிடமிருந்து திருமணத்தின் போது நிர்ப்பந்தமாக கேட்டுவாங்கப்படும் ஒன்றாக - திருமணத்திலிருந்து பிரிக்கமுடியாததாக மாறியுள்ளது. நமது விவாதங்களும் இதிலிருந்தே தொடங்க வேண்டிய வரலாற்றுக் கட்டத்தை அடைந்துவிட்டன. ஊற்றுமூலம் எதுவாயிருப்பினும் நிகழ்கால நடைமுறை எப்படியாயிருக்கிறது என்பதே குறிப்பிட்ட நடைமுறையை மாற்றியமைக்கப் போகிறவர்களின் தொடங்குபுள்ளியாயிருக்க வேண்டும்.

நமது சமூகத்தில் நிலவிடும் சீதனமுறைமையின் அடிப்படையில் அமைந்த திருமணமுறைமை பெண்களை எவ்வாறெல்லாம் கட்டுப்படுத்துகிறது என்பதற்கு நமது சமூகத்திலிருந்தே உதாரணங்களை எடுப்போம்:

- கல்வியாளரும், சமூகத்தில் பெருமனிதராய்க் கணிக்கப்படுபவரும், பொருளாதார வசதிபடைத்தவருமான ஒரு தந்தை தனது ஒரே மகளை மேல்நிலைப் பட்டப்படிப்புக்கு அனுமதிக்கவில்லை. அதற்கு அவர் கூறிய காரணம், பெண்கள் கூடப் படித்தால் மாப்பிள்ளை கிடைப்பது கஷ்ரம், கூடப்படிச்ச மாப்பிள்ளை என்றால் கூடுதல் சீதனம் கொடுக்க வேண்டிவரும் என்பதாகும்.

-உயர்கல்விகற்று அரசில் உயர் உத்தியோகத்திலிருக்கும் தந்தையொருவர், வேற்று மதத்தவரை காதலித்த தனது மூத்தமகளை அழைத்து கேட்ட கேள்வி நீ இப்படி செய்தால் நான் எப்படி உனக்கு பின்னால இருக்கிற பொம்பிளப்பிள்ளைகளை விற்கிறது? என்பதாகும்.

-பாடசாலையில் படிக்கையில் காதல் கொண்ட இளம்பெண்ணுக்கும் ஆணுக்கும் திருமணம் நிச்சயிக்கப்பட்ட பின்னர், ஆணின் பல்கலைக்கழகப் படிப்புக்குப் பெண் வீட்டாரே செலவழிக்க வேண்டும் எனும் நிபந்தனை விதிக்கப்பட்டுள்ளது. பெண் வீட்டாரோ தமது வாழ்வைக் கொண்டு நடத்துவதற்கே சிரமப்பட்டு வருகின்றனர்.

- வவுனியாவில் வயல் செய்யும் ஆணுக்கு சீதனமாக பெண்வீட்டார் இரண்டு வருடம் அத்தம்பதியரை வைத்து பராமரிக்க வேண்டும் எனும் நிபந்தனை விதிக்கப்பட்டுள்ளது.

-பாடசாலையில் படிக்கும் போது சக மாணவனைக் காதலித்து அவனால் கைவிடப்பட்ட பெண்ணை வேறு ஒரு ஆணுக்கு திருமணம் செய்ய பேசியபோது அவன் அவளது பழைய காதலை மறைமுகமாகக் காரணம் காட்டி கூடுதல் சீதனம் வழங்கும்படி பேரம் பேசினான்.

-பேசப்பட்ட சீதனத்தைப் பெண்வீட்டாரால் தர முடியாமற்போனதால் கணவனால் உளவியல் துன்புறுத்தலுக்குள்ளான பெண் மனநோயாளியானால்.

- சீதனப் பிரச்சினையால் சில வருடங்களுக்கு முன்னர் வவுனியாவில் ஒரு குடும்பமே (10 பேர்) தற்கொலை செய்துகொண்ட சம்பவத்தை மறப்பதற்கில்லை.

இந்த உதாரணங்களினூடாக நாம் பெண்மீது சமூகத்தால் விதிக்கப்பட்டிருக்கும் பல்வேறு அடக்குமுறை வடிவங்களது பிணைப்பையும், சீதனமுறைமையானது எவ்வாறு அவற்றுடன் தொடர்புபட்டு செயற்படுகிறது என்பதையும் காணக் கூடியதாயுள்ளது.

1. பெண்ணுடன் சொத்துகளையும் (அறிவுச் சொத்துகளான கல்வி தொழில் அடங்கலாக) எதிர்பார்ப்பது பெண் இன்னும் ஆணுக்கு சமனாக முழுமையுடைய ஜீவியாக சமூகத்தால் மதிக்கப்படவில்லை என்பதை காட்டுகிறது.

2. பெண்ணிலும்விட ஆண் எப்பொழுதும் சமூக அளவில் உயர்ந்த ஸ்தானத்தில் இருக்க வேண்டுமெனவும் ஒரு ஆணுடன் சேர்ந்து வாழப்போகும் பெண் அதற்கு முன்தயாரிப்பாக தனது ஆளுமைகளைக் கூட (உயர் கல்வி பெற்று சமூகத்தில் உயர் நிலைகளை அடைதல்) மட்டுப்படுத்திக் கொள்ள கட்டாயப்படுத்தப்படுகிறாள்.

3. திருமணமும் அதன் வழிப்பட்ட தாய்மையும் பெண்ணின் வாழ்வை பூரணத்துவமாக்குகிறது என்கிறது ஆணாதிக்க சித்தாந்தம். எனினும் பெண் அதை அடைவதற்கான தகுதிகளை (சீதனம், அழகு... இன்னபிற) கொண்டிருக்க வேண்டும் எனவும் எதிர்பார்க்கப்படுகிறது. இது பெண்மீது இரட்டை அழுத்தங்களை விதிப்பதாயுள்ளது.

4. திருமணத்தின் மூலமே பெண் தனது பாலியல் தேவைகளை நிறைவேற்றிக் கொள்ள வேண்டும் என்பது பெண்ணுக்கான சமூகக் கட்டளை. சீதனமில்லாப் பெண்ணுக்கு திருமணமில்லை. திருமணமில்லாப் பெண்ணுக்கு பாலியல் இல்லை. சீதனத்தை மையமாகக் கொண்ட திருமணமானது பெண்ணின் பாலியலை மறுப்பதை நோக்கி இட்டுச் செல்கிறது.

இப்படியாக, பெண்ணை ஆணிலும் இரண்டாந்தரமாக்கும், பெண்ணின் சமூக ஆளுமையை மட்டுப்படுத்தும், “சுமங்கலி”, “நல்லதாய்”, “நல்ல பெண்”, போன்ற பெண்ணை வருத்தும் சித்தாந்த அழுத்தங்களை பெண்மீது திணிக்கும், பெண்ணின் பாலியலை மறுக்கும், பெண்மீது வன்முறையை பிரயோகிக்கும்... பல்வேறு ஆணாதிக்க அடக்குமுறை வடிவங்களினதும் கோர்வையாகத்தான் சீதனமுறைமை இன்று மறைமுகமாகவும் நேரடியாகவும் தொழிற்பட்டு வருகிறது. எனவே சீதனமுறைமையை சொத்துரிமை சார்ந்த செயற்பாடு என்பதிலும் விட ஆணாதிக்க முறைமைக்கு பலம் சேர்க்கும் ஆணாதிக்க நிறுவனங்களில் ஒன்றாகவே நாம் காண்கின்றோம்.


அத்துடன் சீதனத்தின் பெயரால் பெண்ணின் மீது ஆணினால் விதிக்கப்படும் நிபந்தனைகள் பெண்ணை பணிந்து வரச் செய்வதாயுள்ளது. ஆணின் நிபந்தனைக்கு கட்டுப்பட முடியாவிடில் திருமணப் பேச்சுவார்த்தை முறிவடைகிறது. அவ்வகையில் சீதனமுறைமையானது அதிகார உறவின் நேரடி வெளிப்பாடாக இருக்கிறது.

ஆணின் பொருளாதார நலன்களைக் கருத்திற்கொண்டு பெண்ணை நெருக்கும், பெண்ணின் பொருளாதார ஆற்றலுக்கு மீறிய கோரிக்கைகளை அவளிடம் முன்வைப்பதன் மூலம் அவளை பௌதீக ரீதியாகவும் - உளவியல் ரீதியாகவும் துன்புறுத்தும் கருவியாக செயற்படுகிறதெனும் வகையில் சீதனத்தை வன்முறை நடவடிக்கையாகவே நாம் காணமுடியும்.

ஆணுக்கு நிகராக அறிவையுடைய, சமூக உழைப்பில் ஈடுபடும் ஆற்றலுடைய, அனைத்தையும் விட குடும்பத்திற்கு தனது உழைப்புச் சக்தி முழுதையும் பிழிந்து கொடுக்கும் பெண்ணிடம் சீதனம் கேட்டு நிர்ப்பந்திப்பது எவ்வகையில் நியாயமானது? எவ்வகையிலும் ஏற்றுக்கொள்ளப்பட முடியாத - அதிகாரத்துவத்தையும் வன்முறையையும் பின்புலமாய்க் கொண்ட இச்சீதனமுறைமையை தொடர்ந்தும் நிலவிட அனுமதித்துக் கொண்டிருப்பது நமது பெண்ணிய நோக்கங்களுக்கு முட்டுக்கட்டையாகவேயிருக்கும்.

இன்று தமிழீழத்திலும் புலம்பெயர் நாடுகளிலும் செயற்பட்டுவரும் பெண்கள் அமைப்புகளும் பெண்ணிய செயற்பாட்டாளர்களும் சீதனத்தை ஒழிப்பதற்கான பொதுவான வேலைத்திட்டமொன்றை முன்வைத்து செயற்பட வேண்டிய தேவையுள்ளது. சீதனத்திற்கெதிரான ஒரு தனியான சுயாதீனமான இயக்கத்தை பெண் செயற்பாட்டாளர்கள் உருவாக்குவதானது படிப்படியாக சீதனத்திற்கெதிரான விழிப்புணர்வை சமூகத்தில் ஏற்படுத்தும். இதை நீண்ட காலத்தில் வெற்றியளிக்கக் கூடிய திட்டமாகக் கொண்டு இப்பொழுதிலிருந்தே நமது போராட்டத்தை ஆரம்பிக்க வேண்டும்.

இதுபுதிய நூற்றாண்டு, புதிய சரித்திரம், உலகமே புதுமையை நோக்கி செல்கையில் ஈழத்தமிழ் பெண்களான நாம் மாத்திரம் ஏன் பழைய அடக்குமுறை சிலந்தி வலைகளில் சிக்குண்டு இருக்க வேண்டும். சகோதரிகளே! நம்மீதான தடை களை தகர்த்து முன்னேறுவோம். விடுதலைச் சிறகை வானில் விரிப்போம்!!!



பல்வேறு ஆணாதிக்க அடக்குமுறை வடிவங்களினதும் கோர்வையாகத்தான் சீதனமுறைமை இன்று மறைமுகமாகவும் நேரடியாகவும் தொழிற்பட்டு வருகிறது. எனவே சீதன முறைமையானது சொத்துரிமை சார்ந்த செயற்பாடு என்பதிலும் விட , இருந்த ஆணாதிக்க முறைமைக்கு பலம் சேர்க்கும் ஆணாதிக்க நிறுவனங்களில் ஒன்றாகவே நாம் காண்கின்றோம்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# 21ம் நூற்றாண்டில் தேசங்களின் விடுதலையும் மக்கள் சார்பு பொருளாதாரமும்

20ம் நூற்றாண்டின் இறுதி அரைப் பகுதியானது தேசிய விடுதலைப் போராட்டங்களின் பதிவுகளைச் சுமந்து நிற்கும் காலப்பகுதியாகும். இக்கால கட்டத்தில் தேசங்கள் தமது விடுதலைப் போராட்டங்களை தீவிரப்படுத்தியிருப்பது மட்டுமல்லாது சில தேசங்கள் விடுதலையடைந்து தமக்கென தனியரசையும்ஸ்தாபித்துக் கொண்டுள்ளன. தேசிய அரசியலின் உயர்ந்தபட்ச தேவைதேச அரசைஸ்தாபிப்பதுஎனும்வகையில்தேச அரசைஸ்தாபிப்பதுடன் மாத்திரம் குறிப்பிட்ட ஒரு தேசிய இயக்கத்தின்செயற்பாடு முடிவடைகிறதா? இதற்கும்அப்பால்தேசங்களின்இறைமையை சுயாதீனத்தை சுதந்திரத்தை தொடர்ச்சியாக கட்டிக்காத்திடுவதற்கான வழிமுறைகளை எவ்வாறு மேற்கொள்வது எனும் கேள்விகளும்கூடவே எழுகின்றன.

மனித குலத்தின் இருப்பைத் தீர்மானிப்பதில் பொருளாதாரத்திற்கு முக்கிய பாத்திரமுண்டு. குறிப்பிட்ட சமூக அமைப்பின் பொருளாதார முறைமை அச்சமூக அமைப்பின் வாழ்வியல் முறைமையை - சமூக உறவுகளை தீர்மானிப்பதில் கணிசமான பாத்திரமாற்றுகிறது. உழைப்புச்சக்தி சுரண்டப்படுவதை அடிப்படையாகக் கொண்ட பொருளாதார உற்பத்தி உறவு முறையானது மனிதர்களிடையே ஏற்றத் தாழ்வானதும் அடக்குமுறை சார்ந்ததும் அதிகாரத்துவ மயப்பட்டதுமான வாழ்வியல் முறை நிலவிட பெரிதும் காரணமாயுள்ளது. அத்துடன்சமூகத்தின்அனைத்து வகைப்பட்ட ஏற்றத் தாழ்வானதும் அதிகாரத்துவமானதுமான உறவுமுறைகளுடனும்- ஆணாதிக்கம், சாதியம், பேரினவாதம், நிறவெறி....- இணைந்து தனது நலனைப் பாதுகாத்துக் கொள்வதற்காக அவ்வவ் கட்டமைப்புகளின் பிற்போக்குத்தன மானதும் அடக்குமுறைத் தனமாதுமான போக்குகளைப் பலப்படுத்துவதுமாயுமிருக்கிறது. இவ்வாறு சுரண்டல் பொருளாதார முறைமையானது சமூகத்தின் பிற்போக்குத் தனங்களையும் அடக்குமுறைவடிவங்களையும் பாதுகாப்பதன்மூலம் பெரும்பான்மையான மக்களது வாழ்வில் மென்மேலும் சுமைகளை ஏற்றுவதாயிருக்கிறது. தமது தலைவிதியை தாமே தீர்மானிக்கும் உரிமையைக் கொண்டிருக்கும் தேசங்களது போராட்ட சக்திகள் தமக்கான தேசிய அரசை ஸ்தாபிக்கையில் பரந்துபட்ட மக்களின் நலனை அடிப்படையாகக் கொண்டு சுரண்டல் பொருளாதார முறை மையை தகர்த்து சோசலிச பொருளாதார முறைமையை ஸ்தாபிப்பதற்கான நீண்டகால வேலைத்திட்டத்தை கொண்டிருப்பதுடன் தமது போராட்ட அரசியலை சோசலிச சமூக அமைப்பை உருவாக்குவதை நோக்கி நகர்த்துவதில் எப்பொழுதும் பிரக்ஞையுடனிருக்க வேண்டும்.

20ம் நூற்றாண்டின் இறுதிப் பகுதியில், நமது கண்களுக்கு முன்னாலேயே பல தேசங்கள் தமக்கான தேச அரசை ஸ்தாபித்துக்கொண்டன. ஆனாலும்மக்கள் சார்புப் பொருளாதாரக் கொள்கையை முன்மொழிந்த தேச விடுதலை போராட்ட சக்திகள் கூட தேச அரசு ஸ்தாபிக்கப்பட்ட பின்னர் தாம் முன்மொழிந்த கொள்கையைக் கைவிட நேர்ந்தது. சோவியத் தகர்வுக்கு முன்னர் உலகானது வலது இடது என இரு முகாம்களாக இருந்த நிலையில் விடுதலையடைந்து வரும் புதிய நாடுகளுக்கு ஒப்பீட்டளவில் தாம் விரும்பிய பொருளாதாரக் கொள்கையை நம்பிக்கையுடன் முன்னெடுப்பதற்கான வாய்ப்புகள் இருந்தன. தற்போது நிலைமைகள் மாறிவிட்டன. எனவே உருவாகிடும் புதிய அரசுகள் முதலாளித்துவப் பாதைக்குள் செல்வதற்கான காரணங்களை அப்போராட்டத் தலைமைகளின் அரசியலில் மாத்திரமல்ல இதற்கும்அப்பால் ஏகாதிபத்தியத்தின் இன்றைய புதிய உலக ஒழுங்கமைவிலேயே தேட வேண்டியுள்ளது.

ஏகாதிபத்திய முகாமின் நவீன பொருளாதாரக் கொள்கையானது உலக மயமாக்கல் எனும் பெயரில் முழு உலகையும் தனது ஆதிக்கத்தின் கீழ் கொண்டு வரும் நோக்குடன் திட்டமிட்டு அமுலாக்கப்பட்டு வருகிறது. மூன்றாமுலக நாடுகளின் சுதேச உற்பத்தி முறைகளை, பொருளாதார வாழ்வியல் முறையை சிதைத்தும் செயற்கையான வரட்சியை, பஞ்சங்களை அந்நாடுகளில் ஏற்படுத்தியும் நாசகார யுத்தங்களை வளர்த்தும் வருகிறது. இதன் மறுபுறம் தம்மால் உருவாக்கப்பட்டுள்ள உலக வங்கி போன்ற நிதிநிறுவனங்கள் மூலம் அதே மக்களுக்கு நிதியுதவியை வழங்குகிறது. இப்படியாக தவிர்க்க முடியாது இந்நாடுகள் தன்னைச் சார்ந்திருக்கச் செய்வதில் ஏகாதிபத்தியம் வெற்றி பெற்றுள்ளது. இதற்காக உலக வங்கியை ஏகாதிபத்தியம் இயக்கி வருகிறது. அமெரிக்க அரசின் நேரடிக் கட்டுப்பாட்டின் கீழ் இயங்கும் உலக வங்கி நடுநிலையாளர் போல் தன்னைக் காட்டிக் கொண்டு ஏகாதிபத்திய பொருளாதாரக் கொள்கையையே அமுலாக்கி வருகிறது. தமது வறுமையிலிருந்து மீள முயலும் எந்த நாடும் உலக வங்கியிடமும் ஏனைய ஏகாதிபத்திய நிதிநிறுவனங்களிடமும் கடன்பெற்றே ஆக வேண்டிய நிலை தோற்றுவிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில், உருவாகிவரும் புதிய தேச அரசுகள் தமது உடனடி பொருளாதார நெருக்கடிகளுக்குத் தீர்வு காண்பதற்கும் தமக்கான நீண்டகால பொருளாதாரத்தைக் கட்டியமைப்பதற்கும் உலக வங்கி மற்றும் ஏகாதிபத்திய நிறுவனங்களிடம் கடன்பெறுகின்றன. இது தவிர்க்க முடியாது முதலாளித்துவ பொருளாதார முறைமைக்குள் இந்நாடுகளை இழுத்துச் செல்வதுடன் ஏகாதிபத்தியத்தின் நவீன அடிமைகளாக்கிவிடுகிறது. போராடிப்பெற்ற விடுதலையை ஏகாதிபத்தியத்திற்கு அடகு வைத்து தமது சுதந்திரத்தை இறைமையை இழக்கும் நிலை இந்நாடுகளுக்கு ஏற்படுகிறது.

தமிழீழ தனியரசை அமைப்பதற்காக போராடிக்கொண்டிருக்கும் நாமும் நமது குடியரசை ஸ்தாபிக்கும் கணத்துடன் நமக்கான பொருளாதாரத்தை நாமாகவே முன்னெடுக்க வேண்டிய தேவையைக் கொண்டவர்களாயிருக்கிறோம். சிறிலங்கா அரசானது தனது ஆக்கிரமிப்பு யுத்தத்தின் மூலம் நமது நிலையான வாழ்வை சிதைத்து வருகிறது. மக்களும் போராட்ட சக்திகளும் தொடர்ச்சியாக இடம் பெயர்வது, எந்நேரமும் ஏற்படக் கூடிய உயிராபத்து மற்றும் பொருளாதாரத்தடை காரணமாக நமது சுய உற்பத்தி தடை செய்யப்பட்டுள்ளது. விவசாயம், மீன்பிடி, சிறுபண்ட உற்பத்தி, வர்த்தகம், கிராமியக் கைத்தொழில் யாவும் முடமாக்கப்பட்டு பல வருடங்களாகின்றன. அத்துடன் அறிவுத்துறை செயற்பாடுகளுக்கான சூழலும் வளங்கள் வாய்ப்புகளும் மறுக்கப்பட்டுள்ளன. இந்நிலையில் நமது அடிப்படைப் பொருளாதாரத் தேவைகளுக்காக நாம் சிறிலங்கா அரசையே எதிர்பார்த்திருக்க நேர்ந்துள்ளது. நமது எதிரியோ நம்மீது கடும் பொருளாதாரத் தடைகளை விதித்து நம்மை பட்டினி போடுவதன் மூலம் கூட்டாகத் தண்டித்து வருகிறது. தனது இன அழிப்பின் வடிவங்களிலொன்றாக பொருளாதாரத்தடையையும் மக்களின் பட்டினிச் சாவையும் அது முடுக்கிவிடுகிறது. எனினும் இதுவரையிலான அனுபவங்களை சுவர்ந்து கொண்டு நமக்கான சுய பொருளாதாரத்தை திட்டமிடவும் முன்னெடுக்கவுமான முயற்சிகளில் நாம் இறங்கவில்லை என்பது நமது பக்கத்தில் துர்ரதிர்ஷ்டமானதே. இத்தகைய போக்கு நம்மில் தொடருமானால் தமிழீழக் குடியரசு அமைகையில் தேசத்தின் பட்டினிக் கொடுமைக்கு உடனடி நிவாரணம் வேண்டி உலக வங்கியிடம் சரணடையும் அவலம் தான் நமக்கும் நேரிடும்.

தமிழீழக் குடியரசு அமைகையில் நமது தேசம் பட்டினி, வறுமை, நோய், கல்வியின்மை... ஆகிய துயரங்களால் நிறைந்திருக்கும் என்பதற்கு இன்றைய நிலையே எடுத்துக்காட்டு. விவசாயக் காணிகளை செப்பனிட்டு நீர்ப்பாசனத்தை உருவாக்குவது, பாதைகளை சீரமைப்பது முதல் அனைத்து விதமான உற்பத்தி முயற்சிகளையும் முதலிலிருந்து ஆரம்பிக்க வேண்டியவர்களாக நாமிருப்போம். இந்நிலையில் மின்சாரம், போக்குவரத்து, மருத்துவம்..... ஆகிய அனைத்து விதமான உள்ளகக் கட்டுமாணங்களையும் உருவாக்கி அடிப்படை அபிவிருத்தியை மேற்கொள்வதற்கு நமக்கு சகநாடுகளது உதவி உட்பட உலக வங்கியிடமும் கூட உதவி கோர நேரிடும். எனினும் நமது சுயாதீனத்தை இறைமையை யாருக்கும் அடைவு வைத்துவிடாத வகையில் இக்கடன் உதவிகளைப் பெறுவது பற்றி நாம் தீர்மானிக்க வேண்டும். நமது தேசியப் பொருளாதாரக் கொள்கைக்கும் உலக வங்கிக்குமிடையிலான உறவுகளை தீர்மானிக்கும் உரிமையை நாம் எமது கைகளில் தக்க வைத்திட வேண்டும். அது மாத்திரமன்றி பிராந்திய வல்லாதிக்க அரசான இந்தியாவினதும் நவகாலனிய ஆக்கிரமிப்பாளரான ஜப்பானினதும் கடனுதவிகளைப் பெறுவதிலும் கூட நாம் எச்சரிக்கையாயிருக்க வேண்டும்.

நமது தேசத்தின் பொருளாதாரக் கொள்கையை உருவாக்குவது தொடர்பான ஆய்வுகளுக்கான முயற்சிகள் ஏதும் இதுவரையில மேற்கொள்ளப்படவில்லை. தமிழ்த் தேசத்தின் கல்வியாளர்களும், பொருளியல் ஆய்வாளர்களும், சமூக நிறுவனங்களும் இதில் தமது அக்கறையைக் குவிக்க வேண்டுமெனவும் இதை தமது தேசியக் கடமையாகக் கருதி முன்னெடுக்க வேண்டுமெனவும் நாம் கோருகிறோம்.

தேசங்களின் சுதந்திரம் என்பது தனியான அரசைக் கொண்டிருப்பது மாத்திரமல்ல, அந்நிய அரசியல் மற்றும் பொருளாதார ஆக்கிரமிப்புகளுக்கும் சுரண்டலுக்கும் நேரடியாகவோ மறைமுகமாகவோ உள்ளாகாது தமது சுயாதீனத்தையும் இறைமையையும் பாதுகாத்துக் கொள்வதும் தான். இவ்வகையில் விடுதலையடைந்து வரும் தேசங்களின் அரசியல் தலைமைக்கு தனியரசு அமைப்பது மாத்திரமல்ல அதற்கும்அப்பால் உலக வங்கியின் அடிமைச் சாசனத்திற்கு தம்மை உட்படுத்திக் கொள்ளாது தமது சுயாதீனத்தைக் காப்பாற்றிக் கொள்ள வேண்டிய தேவையுமுள்ளது. இவ்விடத்தில் சுயசார்புப் பொருளாதாரமென்பது முதன்மை பெறுகிறது.

சுயசார்புப் பொருளாதாரத்தின் பண்பானது நாட்டின் பெரும்பாலான மக்களின் வாழ்வில் மறுமலர்ச்சியை ஏற்படுத்துவதை இலக்காகக் கொண்டதாகும். இதுவரையில் சுரண்டலுக்குள்ளாக்கப்பட்டு வரும் பெரும்பாலான மக்களின் உபரியை அவர்க

(தொடர்ச்சி 08இல்)





தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# சந்திரிகாவின்...

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

விதத்தில் சந்திரிகாவை தமிழ் மக்கள் நிராகரித்துள்ளனர். எனினும் இனிவரும் வாய்ப்புகளை இதை விட துல்லியமாக இனவாதிகளுக்கு எதிராகவும், எமது இலட்சியத்தை நோக்கியும் நாம் வெளிப் படுத்த வேண்டும்.

நமக்கு நேரடியாக சம்பந்தமில்லாத ஒரு தேர்தலாக இருந்தாலும் இதனை பயன் படுத்தி நமது ஒருமித்த அரசியல் நிலைப் பாட்டை சர்வசன அபிப்பிராயமாக வெளிப் படுத்த வேண்டும். இதற்கு இந்த தேர்தலை ஒட்டுமொத்தமாக பகிஸ்கரிப்பது, இதற்கு வாய்ப்பில்லாதவர்கள் தமது வாக்குகளை செல்லுபடியற்றதாக்குவது இதன் மூலம் எமது அரசியல் தலைவிதியை ஒட்டுமொத் தமாக நாமே நிர்ணயிப்பது நோக்கி செயற் படுவது என்ற கருத்தை தமிழீழ மக்கள் கட்சி தனது 9வது பத்திரிகையிலும், தேர் தலை இலக்காக கொண்டு வெளியிட்ட துண்டுப்பிரசுரத்திலும் வலியுறுத்தியிருந் தது. நடைமுறையில் எமது கோரிக்கை அதிகபட்சம்சாத்தியமாகா விடினும்இப்போ தும் அதுவே சரியான நிலைப்பாடாக உள்ளது. சிங்கள மக்களில் பெரும்பாலா னோர் தமக்கு பொருத்தமான தலைமை யையும்தமது அரசியல்என்ன என்பதையும் நேரடியாகவே வெளிப்படுத்தியுள்ளனர். இந்த விதத்தில்நமது கருத்து வெளிப்பாடு இன்னும் நேரடியாக அமைய வேண்டும். நம்மிடம்இருந்து இன்னும் அரசியல்தீர்க்கம் வெளிப்பட வேண்டும். இனிவருங்காலங்க ளில்இது குறித்து நாம் இன்னும் விழிப்பாக இருக்க வேண்டும்.

சந்திரிகா சிங்கள தேசத்தின் சார்பில் தனது வெற்றியை கொண்டாடுகின்றார். தமது மக்களின் புத்திசாலித்தனத்தை மெச்சுகின்றார். தமிழ் மக்கள் தனக்கு வாக்களிக்காது விட்டதை சிங்கள மக்கள் எச்சரிக்கையாக எடுத்துக்கொள்ள வேண் டும் என்கிறார். இதனை ரணிலினதும் புலிக ளதும் கூட்டுச்சதி என்கிறார். இதைப்பற்றிய நமது புரிதல் என்ன? எமது வாக்குகளை சந்திரிக்காவிற்கு அளிக்காது ரனிலுக்கு அளித்ததன் மூலம் எமது அரசியல் நோக்கத்தை துல்லியமாகவும் சரியாகவும் வெளிப்படுத்தி விட்டோமா? இல்லை. இன்ன மும் எமது தேசம் அரசியல் மதிநுட்பம் வாய் ந்த முறையில் தனது நிலைப்பாட்டை வெளிப்படுத்த வேண்டும். இத்துடன் எல்லாம் முடிந்து விட்டதாக நாம் கருத தேவை யில்லை. இன்னமும் பல சந்தர்ப்பங்கள் எமக் காக காத்திருக்கிறன. விடுதலைப் போராட்டம் நீண்டது. பயன்படுத்திக் கொள்வோம்.

தனக்கு அளிக்கப்படாத தமிழ் வாக் குகளை எச்சரிக்கையாக எடுத்துக் கொள்ள வேண்டும் என்கிறார் சிறிலங்கா அரசுத்தலைவர் சந்திரிகா. தமிழரின் இந்த பதிலடியை அவர் ஏற்கனவே எதிர்பார்த்தி ருந்தார். எனவேதான் முழுக்க முழுக்க சிங் கள வாக்குகளை இலக்காக கொண்டு வியூகம் அமைத்து , பிரச்சாரங்களை முடுக்கி விட்டிருந்தார். இருந்தும் தற் போது எச்சரிக்கை பற்றி பிரஸ்தாபிக்கின் றார். இதன் பொருள் என்ன? தமிழ் மக்களின் எச்சரிகையை கருத்தில் எடுத்து அரசியல் தீர்வினை விரைவாக அடைய வேண்டும். சிங்கள மக்களே அதற்கான ஒத்துழைப்பை தாருங்கள் என்கின்றாரா? அல்லது தமிழ் மக்கள் தனது அரசின் கடந்தகால முயற்சி களை நிராகரித்து விட்டனர். எனவே முற்றும் முழுதான அழித்தொழிப்பு யுத்த மொன்றுதான் ஒரே வழி, இதன் மூலம் புலிக ளையும் விடுதலைப்போராட்டத்தையும் அடியோடு நசுக்கி தமிழருக்கு ஒரு பாடம் கற்பிக்க வேண்டும் .எனவே தனக்கு முழுமையான ஒத்துழைப்பை தாருங்கள் என்கின்றாரா?

நிச்சயமாக இரண்டாவது தான் அவர தும், அவர் தலைமையிலான அரசினதும் தெளிவான இலக்காகும். சிங்கள பௌத்த தினமான பௌர்ணமியில் பதவி ஏற்பு, தேசிய அரசாங்கத்திற்கான அழைப்பு, உலக நாடுகளில் புலிகளின் நிதிதிரட்டல் நடவ டிக்கைகள் மற்றும் நிதி மையங்களை தடைசெய்யும்படியான கோரிக்கைகள் , தனது தேர்தல்வெற்றி எக்காளம் எல்லாம் இதனையே சுட்டுகின்றது. இந்த சவால் களை நமது தேசம் ஒன்றுபட்டு எதிர் கொள்ள வேண்டும். இன்றுள்ள இராணுவ சமபல நிலை தற்காலிகமாக நமது தேசத் திற்கு சாதகமாக உள்ளது. இருந்தும் அரசி யல்சமபல நிலையையும் எமக்கு சாதகமாக மாற்றா விடில் எதிரிப்படைகள்மீது அடையப் பெற்ற தற்போதைய வெற்றிகள்கூட அர்த்த மற்றதாகி விடும். இப்படியான நிலைமைகள் கடந்த காலத்தில பல தடவைகள் ஏற்பட் டுள்ளதை நாம் அறிவோம். எனவே நமது தேசம் அரசியல் ரீதியில் தனது பலத்தை தொடர்ச்சியாக நிருபிக்க வேண்டும். அதனை மக்களின் பலத்தில் மீதன்றி வேறுவழிகளில் ஈட்டமுடியாது. இந்த தளத் திலும் எமது கட்சியின் உழைப்பு கணிசமாக இருக்கும் என்பது உறுதி. பல்வேறு சமூக சக்திகளையும் போராட்ட சக்திகளையும் இந்த தளத்தில ஒன்றிணைக்க வேண்டியது நமது தேசிய விடுதலைப்போராட்டத்தின் வெற்றிக்கு இன்றியமையாத முதன்மை நிபந்தனையாகும். ஒன்றையொன்று பலப் படுத்திடும் அரசியல் மற்றும் இராணுவ ஒருங்கிணைப்பானது தேசியவிடுதலைக்கு இன்றியமையாத நிபந்தனையாகும்.

# 21ம் நூற்றாண்டில்...

(6ம் பக்கத் தொடர்ச்சி)

ளின் நலனுக்காகப் பயன் படுத்துவதும், அவர்களது முயற்சியாலேயே அவர்கள் தமது பொருளாதாரத்தை, தொழில்நுட் பத்தை, அறிவியலை வளப்படுத்துவ தற்கான வசதிகளையும் வாய்ப்புகளையும் ஏற்படுத்துவதும் சுயசார்புப் பொருளா தாரத்தை மக்கள் சார்புப் பொருளாதார முறைமையாக்குகிறது. மக்களது பொருளா தார, சமூக, அரசியல் வாழ்வில் சமத்து வத்தை இலக்காகக்கொண்ட இப்பொருளா தார முறைமையை நாம் சோசலிச பொருளா தார முறைமையாகக் காண்கிறோம். சோசலிசத்தை நோக்கிய பயணமென்பது விடுதலை பெற்ற இளம் நாடுகளுக்கு அவ்வளவு எளிதில் கைகூடி வரப்போவ தில்லை. இதற்காக அவை நீண்ட தூரம் பயணிக்க வேண்டி வரும். வளமான தொழில் துறை, விவசாயத்தில் தன்னிறைவு, கல்வி மற்றும் அறிவியல் வளர்ச்சி உட்பட மக்களது கலாச்சார சிந்தனையிலும் பாரிய மாற் றங்கள் ஏற்பட வேண்டும். இதற்கு முதற் கட்டமாக விடுதலையடையும் தேசங்கள் தமக்கான குடியரசை ஸ்தாபித்து சோசலிச சமூக அமைப்பை உருவாக்குவதற்கான ஆரம்ப கட்ட நடவடிக்கைகளை மேற் கொள்ள வேண்டும். நாமும் இதற்கு விதிவில க்கானவர்களல்ல. எமது தேச விடுதலை யின் முதற்கட்ட நடவடிக்கை யாக நாம் தமிழீழக் குடியரசை அமைத்து சோசலிச சமூக முறைமையை நோக்கிப்பயணிப்பத ற்கு அவசியமான அனைத்து பௌதிக-ஆன் மீகக் காரணிகளையும் அபிவிருத்தி செய் திட வேண்டும். சோசலிசப்பாதையே ஏகாதி பத்தியத்திற்கெதிராக நவீன அடிமைத் தனத்தை தகர்ப்பதில் பிரதான ஆயுதமா யிருக்கிறது. இதுவே 21ம் நூற்றாண்டில் விடுதலையடையும் தேசங்களின் நீண்டகாலத் தெரிவாயுமிருக்க வேண்டும்.

# மக்கள் களம்

தமிழீழம் ஆசிரியர்குழுவிற்கு புரட்சிகர வணக்கம்!

தமிழீழம், சுதந்திரம், சமத்துவம் எனும் உயர்ந்த, உறுதியான இலட்சியங்களுடன் தேசவிடுதலையை நோக்கி பல்வேறு தடைகளுக்கு மத்தியில் போராடிக்கொண்டிருக்கும் கட்சியின் உறுப்பினர்களுக்கு பத்திரிகையினூடாக புத்தாயிரத்தின் வரவையிட்டு வாழ்த்துக்கள்.

இந்நூற்றாண்டின் முற்பகுதியில் தேசவிடுதலையை வென்றெடுக்கும் தங்கள் எண்ணம் வெற்றிபெறவும், மக்களுக்காக போராடும் பல்வேறு மக்கள் சக்திகளையும் ஒருங்கிணைக்கும் தங்கள் வேலைத்திட்டம் வெற்றியளிக்கவும், “மக்களுக்கே அனைத்து அதிகாரமும்” என்பதை என்றும் நிலையான கொள்கை மாற்றம் இன்றி நிலைநாட்டப்படவும் பெண்விடுதலை நோக்கிய தங்கள் பரந்த வேலைத்திட்டம் பெண்களின் வரவேற்புடன் விரிவுபடுத்தப்பட்டு வெற்றி பெறவும் வாழ்த்துகின்றேன்.

சென்ற பத்திரிகை தொடர்பாக சில வரிகள்:

“சிங்கள அரசையும் அதன் தலைவர்களையும் இன்று நமது மக்கள் முற்றாக புறக்கணித்துவிட்டனர்” என தாங்கள் குறிப்பிட்டிருந்தாலும், கடந்த ஜனாதிபதி தேர்தலின்போது, வாக்களிக்க கூடிய பகுதிகளில் வாழ்ந்த தமிழ் மக்களின் பெரும்பாலானவர்கள் சிங்கள் பேரின வாத கட்சிக்கு வாக்களித்ததை பார்க்கும்போது, நாம் அவ்வாறு திருப்தி அடைந்துவிட முடியாது.

எமது விடுதலைக்கு தடையாக உள்ள காரணிகள் பற்றி மக்கள் மத்தியில் மேலும் தெளிவுபடுத்தப்பட வேண்டிய பணி இன்னும் விரிவுபடுத்தப்பட வேண்டியதாகவே கருதுகின்றேன். புதிய ஆண்டில் பத்திரிகை பணியை மேலும் விரிவுபடுத்தி மேலும் பலருக்கு கிடைக்க செய்ய வேண்டும். கலந்துரையாடல்களும் கருத்தரங்குகளும் அவசியமானவை. பாதுகாப்பு , உழைப்பு, நிதி போன்ற பல்வேறு தடைகளுக்கு மத்தியில் அவற்றை சாதகமாக்குவதென்பதே, இவ்வாண்டின் சாதனையாக அமைய வேண்டும்.

வி. தரிணி - ஆதரவாளர் - இந்தியா

தமிழீழம் கட்சி அரசியல்ஏடு தொடர்பாக சில குறிப்புகளை தங்கள் கவனத்திற்கு கொண்டு வருகின்றேன்.

செய்திகளை பார்க்கும் போது ஏற்கனவே அறிந்து உணர்ந்த தன்மை ஏற்படுகின்றது. இது விடயங்களைத் திருப்பித்திருப்பி எழுதுவதனால் ஏற்படுவதாக இருக்கலாம் எனவே புதிய விடயங்களை தேடிச்சேர்ப்பதிலும் கவனம் எடுப்பது நல்லது. கட்சியின் அரசியல் திட்டத்தின் தந்திரோபாயங்கள் எவ்வளவு தூரம் நடைமுறைக்கு பொருத்தம் என்ற கேள்வி எழுகிறது. இந்தவிடயம் குறித்து உங்கள் பத்திரிகையில் விவாதங்களை நடாத்துவது அவசியம் என கருதுகின்றேன்.

தற்போதைய உலகமயமாக்கலின்(பின்) நமது பொருளாதாரம்மற்றும அரசியல்விடயங்களை எவ்வளவு கையாளப்போகின்றோம். என்பது பற்றிய புதிய அணுகுமுறை தேவைப்படுகின்றது இந்தவிடயங்களை பத்திரிகை தொடுவதாக தெரியவில்லை.

மற்றப்படி பத்திரிகை அதிகம் கோட்பாட்டுதன்மை உள்ளதாகவே தென்படுகின்றது.

சந்திரன்

தென்தமிழீழம்

---

தமிழ் தேசத்தின் பிரதான குறைபாடு தமிழ்த்தேசத்திற்கென கோட்பாட்டுத் தளம் இல்லாததாகும். ஆயதப் போராட்டம் எவ்வளவு வீச்சமாக இருப்பினும் அதை அரசியல் வெற்றியாக மாற்ற முடியாதிருப்பதன் காரணம் சரியான சரியான கோட்பாட்டுத் தளம் இடப்படாததே. எனவே கோட்பாட்டுத்தளத்தைப்பலப்படுத்துவதற்காக நீங்கள் அனைத்துத் தரப்பினருடனும் தொடர்புகளை மேற்கொண்டு கோட்பாட்டுத் துறையை ஒரு சுயாதீனமான துறையாக வளர்த்தெடுக்க வேண்டும்.

ராஜசேகர்,

திருகோணமலை



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

தமிழீழம்

'The Editor'
BM Box 4002
London. WC IN 3XX
United Kingdom

www.thamileelam.org
info@thamileelam.org

# சந்திரிகா அரசு — பாசிச பரிமாணம்!

தமிழ் கொங்கிரஸ் தலைவர் குமார் பொன்னம்பலம் சந்திரிகா அரசின் இரகசிய முகவர்களால் படுகொலை செய்யப்பட்டுள்ளார். ஜனாதிபதித் தேர்தலுக்கு சில வாரங்களுக்கு முன்பு, தினமுரசு ஆசிரியர் அற்புதன் நடராசா (ரமேஷ்) படுகொலை செய்யப்பட்டார். தற்போது கொழும்பில் "இனத்துப்பரவு நடவடிக்கை" அரசால் முடுக்கிவிடப்பட்டிருத்தல். தெற்கில் விடுதலைப் போராட்டத்திற்கு ஆதரவாக விரும்பியோ விரும்பாமலோ உதவி செய்பவர்கள் ஜனாதிபதியால் கடுமையான தொனியில் எச்சரிக்கை. தற்கொலைப் போராளிகளின் அரசியல் செயற்பாட்டுக்கு உறவினர்கள் பழிவாங்கப்படல். களுத்துறை சிறையில் தமிழ் கைதிகள் கொடூரமாகப் படுகொலை. படுகாயப்பட்ட கைதிகள் விலங்குகளுடன் வைத்தியம் செய்யப்படாமல் முடக்கம். இப்படியாக அடுத்தடுத்து சோவினிச அடக்குமுறைகள் விரிந்து செல்கின்றன. முன்னர், "போர் என்றால் போர், சமாதானம் என்றால் சமாதானம்" என்று ஜே. ஆர். கர்ஜித்த தொனியின் இன்னொரு எல்லையாக அமைகின்றது இன்றைய ஜனாதிபதியின் அண்மைய எச்சரிக்கை உரை.

புதிய பரிமாணத்தில் தமிழருக்கு எதிரான யுத்தத்தை சந்திரிகா அரசு பிரகடனம் செய்துள்ளதற்கான சான்றுகள் இவை. ஏற்கனவே கடுமையான தன்மையில் யுத்தத்தை நடாத்தி செல்வதற்கான திட்டமிடலும் நிதியொதுக்கீடுகளும், கருத்தியல் பிரச்சாரமும் தேர்தலுக்கு முன்பே ஆரம்பிக்கப்பட்டு விட்டன. தற்போதுள்ள சூழலை பயன்படுத்தி அரசு முனைப்பாக செயற்படுகின்றது. அடுத்த பாரளுமன்றத்திற்கான பொதுத் தேர்தலிலும் இனவெறியின் துணை கொண்டு "*பெருவெற்றி*" பெற்றிடும் திட்டம் நடைமுறையில் உள்ளது. நாட்டின் மனித உயிர்கள் உட்பட வளங்கள், பொருளாதாரம், சர்வதேச அபிப்பிராயம், இராஜதந்திர முயற்சிகள் அனைத்தையும் மீறியதாக இந்த "அழித்தொழிப்பு யுத்தம்" முதன்மையாகிவிட்டது. சந்திரிகாவின் இனவெறிப்பேச்சுக்களையும் நடவடிக்கைகளையும் மற்றுமொரு சிங்களப் பேரினவாதக் கட்சியான யூஎன்பி கண்டிக்கும் அளவிற்கு இனவாதம் உக்கிரமடைந்துள்ளது எனில், இதன் பரிமாணம் முக்கியத்துவமிக்கது. எதிர்தரப்பில் இருந்த தீவிர இனவெறியர்களை தற்போது தனது பலமாக்கிக் கொண்டுள்ளதோடு, மேலும் இனவாதிகளை தன்னுடன் சேருமாறு அழைப்பும் விட்டுள்ளார், சந்திரிகா. அதுமாத்திரமின்றி, புலிகளுக்கு எதிரான தேசிய அமைப்பென ஒன்றை உருவாக்கியிருப்பதன் மூலம் சிறிலங்காவில் குறிப்பாக கொழும்பில் தமிழர் "இனச்சுத்திகரிப்பு" ம் முரமடையத் தொடங்கியுள்ளதற்கு மேற்படி கொலைகளும் நடவடிக்கைகளும் சான்று.

அடக்குமுறையின் கீழ் தனது இருப்பைப் பேணும் எந்தவொரு அரசும் முதலில், தனது முகத்தை ஜனநாயகமாகக் காட்டிக் கொள்ளும். தனது சிந்தாந்த ஆதிக்க பலம் கொண்டு மக்களை தன் பிடிக்குள் வைத்துக்கொள்ளும் அல்லது தனக்கு எதிராக ஒன்றுதிரளாது பார்த்துக்கொள்ளும். மறுபுறம் தனது தீவிர எதிர்ப்பாளர்களை படிப்படியே அழித்தொழிக்கவும் முயலும். தனது இரண்டு முயற்சிகளிலும் படுதோல்வி அடையும்போது, தனது உண்மையான கொடூர முகத்தை அது வெளிக்காட்டும். இந்த நிலைமைதான், தற்போது சந்திரிகா அரசிற்கு ஏற்பட்டுள்ளது. இதன் விளைவு தனது ஆக்கிரமிப்பு மற்றும் அழித்தொழிப்பு நடவடிக்கைகளின் பரிமாணத்தை அதன் உச்ச கட்டத்திற்கு எடுத்துச்செல்வதாகும்.

சந்திரிகா தரப்பின் ஒரு பகுதி, தீவிர சிங்கள இனவாத அமைப்பான வீர விதானவிற்கு போசகர்களாக இருக்கின்றனர். இன்னுமொரு தரப்பு, வெண்தாமரை என்ற பெயரில் சிங்கள வெகுசனங்களின் மத்தியில் இனவாதத்தை பரப்பி வருகின்றனர். மேற்படி சிங்கள வீர விதான அமைப்பினர் சந்திரிகாவின் வெற்றிக்கு கடந்த 5 வருடங்களுக்கு முன்பு மிகவும் தீவிரமாக செயற்பட்டவர்கள். இந்த அணிகளின் துணையுடன் தீவிர சோவினிஸ்ட் நிலைப்பாட்டை வெளிப்படையாகவே மேற்கொண்டு வரும் சந்திரிகாவின் பேச்சுக்களும் நடவடிக்கைகளும் இனவெறி மிகுந்ததாக இருப்பது ஒன்றும் தற்செயலானது அல்ல. இந்த பின்புலங்களை நாம் சுவீகரித்துக்கொண்டால், நாம் எச்சரிக்கை அடைவது மட்டுமல்ல, இவற்றை எதிர்கொள்வதற்கான போதிய தயாரிப்புகளை நோக்கி எமது தேசம் செல்ல வேண்டும் என்பது தெளிவாகும்.

எனவே, எதிரியின் உண்மையான நோக்கத்தையும் அழித்தொழிப்பு வடிவங்கைளயும் சரியாக கணித்துக் கொண்டு நமது தேசத்தின் முழுமையான சக்தியை அணிதிரட்டி எதிர்கொள்வோம். தளத்திலும், தமிழகத்திலும், புலம்பெயாந்த நாடுகள் பூராவுமுள்ள எமது சக்திகளை ஒன்றுதிரட்டுவோம். அதன் பலத்தில் போராட்டத்தை தொடர்ந்து நடாத்தவும், தேவையான அழுத்தங்களை சர்வதேசத்தில் உருவாக்கவும், நாம் விரைந்து செயற்படுவோம். சந்திரிகாவின் மீது மேற்கொள்ளப்பட்ட தாக்குதலின் விளைவுதான், அரசின் அண்மைக்கால கடும்போக்கிற்கு காரணம் என்ற அசட்டுவாதங்களை இட்டு அவதானமாக இருப்போம். ஜனாதிபதித் தேர்தலுக்கு முன்பே எமது போராட்டத்தை எந்த வழிமுறையிலேனும் நசுக்கி விடுதற்கு சந்திரிகா அரசு திட்டங்களை தீட்டிவிட்டது. எதிர்பாராது கிடைத்த அடிகள் அவர்களை நிலைகுலைய வைத்ததால், இரகசிய நிகழ்ச்சி நிரலாக இதுவரை இருந்து வந்த "அழித்தொழிப்பு திட்டம்" தற்போது பகிரங்கத்திற்கு வந்துள்ளது. ஒரேயொரு வேறுபாடு இதுமட்டும்தான்!

எமது விடுதலைப் போராட்டம் இன்னமும் கடினமானதும் நீண்டதும் என்பதில் மயக்கத்திற்கு இடம் இல்லை. ஒரு நீண்ட அடக்குமுறை அரசியலின் தொடர்ச்சியே இந்த யுத்தமாகும். எமது அரசியல் பிரச்சனை அடிப்படையில் தீர்க்கப்படாது இந்த யுத்தத்திற்கு முடிவில்லை. எனவே இனிவரும் காலம் எமது தேசத்தின் அனைத்து சக்திகளும் அனைத்து முனையிலும் திரட்டி இந்த யுத்தத்தை நாம் தீவிரமாக எதிர்கொள்ள வேண்டும்.

எதிரிகள் தமது சக்திகளை ஒன்று குவிக்கத்தொடங்கிவிட்டனர். நிலைகுலைந்து விட்ட ஆக்கிரமிப்பாளர்கள் யுத்தத்தை மிகவும் கொடூரமான பரிமாணத்திற்கு நகர்த்தி விட்டனர். பாசிச ஆபத்து நமது வாயிற்கதவைத் தட்டத் தொடங்கிவிட்டது. எதிரியின் "சமாதான", "அமைதி" வேடங்கள் அம்பலமாகிவிட்ட நிலையில் அவர்கள் அழித்தொழிப்பு என்பதை முதன்மைத் தெரிவாகக் கொண்டுவிட்டார்கள். இதனை நன்குணர்ந்த நமது தேசமும் அதனை அண்மைய தேர்தலில் வெளிப்படுத்தியும் உள்ளது. மக்களின் இந்த உணர்வுகளை நாம் செயலாக மாற்றவேண்டும். செயலில் திரட்ட வேண்டும். மக்களை தமது விடுதலைப் போராட்டத்தில் ஒரு ஊக்கமான செயற்பாட்டாளர்களாக மாற்றி, மக்களின் உண்மையான பலத்தில் போராட்டத்தை மேலும் விரித்துப் பலப்படுத்துவோம். போராட்டத்தை இவ்வளவு தூரம் முன்னேற்றிய எம்மால் இன்னும் நிறையவே சாதிக்க முடியும். ஆக, இராணுவ, அரசியல், இராஜதந்திர என அனைத்து முனைகளிலும் எதிரியின் சவாலை நாம் எதிர்கொள்வோம். தேசத்தின் நலனில் நின்று நமது அனைத்து சக்திகளையும் ஒன்றுதிரட்டி எதிரிகளை ஒட்டுமொத்தமாக முறியடிப்போம். இதுவே எமது உடனடிக் கடமை!

நமக்குள் இருக்கும் குறுகிய வட்டங்களையும் குத்தகை மனோபாவங்களையும் இந்த புதிய நூற்றாண்டில் கழித்துக்கட்டி புதிய தொடக்கப்புள்ளிகளை எமது போராட்டத்தில் ஆணித்தரமாக இடுவோம். ஒடுக்குமுறைக்குள்ளாகி இருக்கும் ஒரு தேசம் என்ற வகையில், எமது தார்மீகங்கள் எழுந்து எமது விடுதலையை உலகுக்கு முரசறையட்டும்!

## தமிழருக்கு...

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

திரு ரமேஷின் அரசியலானது தேசத்தின் அகம் நோக்கியிருந்தது. திரு குமாரின் அரசியல் வெளி நோக்கி சர்வதேச அளவிலானதாக இருந்தது. இவ்விரண்டுமே தமிழ் மக்களுக்கு அவசியமானவையாகும். தமிழ் மக்களின் அரசியல் தலைமைத்துவத்தை அழித்தொழிப்பதன் மூலம் தமிழர்களின் அரசியல் உள்ளாற்றலை மழுங்கடிக்க முயலும் சிறிலங்கா அரசின் திட்டங்களிலொன்றே இவ்விருவரினதும் படுகொலைகள். இவ்வகையில் எமது தேசத்தின் ஹீபொது நீரோட்ட, அரசியலில் முக்கியமானவர்களை அழிப்பதற்கு முன்னெப்பொழுதும் இல்லாதளவுக்கு சந்திரிக்கா அரசு, திட்டமிட்டுச் செயற்படத் தொடங்கியிருப்பதானது, எம்மேலான யுத்தம் இன்னுமொரு கட்டத்திற்கு சென்று விட்டதை சுட்டி நிற்கின்றது.

சர்வதேச ரீதியாக தமிழரைப் பிரதிநித்துவப்படுத்தும் புத்திஜீவி மட்டத்திலும் பொது நீரோட்டத்திலுமான தமிழரின் அரசியல் தலைவர்களை அழித்தொழிப்பதன் மூலம் தமிழரின் எதிர்கால அரசியல் முயற்சிகளை - ஐ. நா. சபை, ஐரோப்பிய சமூகம், பொதுநலவாய நாடுகள் போன்றவற்றில் தமிழரின் நிலையை எடுத்துக் கூறல், பேச்சுவார்த்தைகளையும் மூன்றாந்தரப்பு மத்தியஸ்தங்களையும் ஒழுங்குசெய்தல் என்ற பல நடவடிக்கைகளை இப்போதிருந்தே முறியடிப்பதில் சிங்கள அரசு வெற்றிகாண முயல்கிறது. குமார் பொன்னம்பலம் இவ்வகை ஆற்றல்களைக் கொண்டவராயிருந்தார். அவ்வகையில் அவரது இழப்பானது, எமது தேசத்தின் ஒரு இழப்பே. திரு குமார் பொன்னம்பலத்திற்கு தமிழீழ மக்கள் கட்சி தமிழ் மக்களுடன் இணைந்து அஞ்சலி செய்கிறது.

## மரண...

(3ஆம் பக்கத் தொடர்ச்சி)

தொடர்பாகக் கவனத்தைக் குவிப்பதும் அதற்கெதிராக தீவிரமாக போராட்டங்களை மேற்கொள்வதும் தமிழீழ விடுதலைப் போராட்டத்தின் அரசியலை மேலும் சர்வதேசமயப்படுத்திடும் என்பது வெளிப்படை. இவ்விடயத்தில் ஈழத்தமிழர் அரசியல் வெகுஜன அமைப்புகளும் போராட்ட சக்திகளும் கவனம் செலுத்துவது மிகவும் அவசியம்.

மரணதண்டனைக் கெதிராக தமிழ கத்தில் செயற்பட்டு வரும் சக்திகளுடன் புலம்பெயர் நாடுகளில் இதே குறிக்கோ ளுடன் செயற்பட்டு வரும் தரப்பினர் இணைந்து மரண தண்டனைக்கெதிரான கூட்டமைப்பை உருவாக்க வேண்டும். அமைப்பு வடிவங்களே அரசியல் வெற்றிகளுக்கு அடிப்படையாகவுள்ளன. இதை கருத்திற் கொண்டு புலம் பெயர் நாடுகளில் காத்திரமாக செயற்பட்டு வரும் தரப்பினர் முன்கையெடுத்து தமிழக சகோதர சகோதரிகளுடன் இணைந்து மரணதண்டனைக் கெதிரான கூட்ட மைப்பை உருவாக்கி மரணதண்டனைக் கெதிரான போராட்டத்தையும் தமிழீழ விடுதலைப் போராட்டத்திற்கான ஆதரவை தமிழகத்தில் பரவலாக் குவதையும் தீவிரப்படுத்த வேண்டுமென தமிழீழ மக்கள் கட்சி அனைவரிடமும் பகிரங்கமாக கோரிக்கை வைக்கிறது.

இலண்டன் தொடர்புகட்கு:
BM BOX 6769
LONDON
WCI 3XX
Tel: 07041372064

கனடா தொடர்புகட்கு:
300 BOROUGH DR
PO BOX 47032
SCARBOROUGH
ONTARIO M1P 4ZP



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்